27

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

1227 / 2-57

OFFICE OF THE REGISTRAR OF B...
24 JUN 1957
MADRAS

13

செய்திகள்

ஜனதிபதி

மீண்டும் ஐந்து ஆண்டுக் காலத்துக்குப் பாரதத்தின் ஜனதிபதியாக டாக்டர் ராஜேந்திர பிரஸாத் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிறர்.

குழந்தைக் கதைகளுக்குப் பரிசு

7 வயது முதல் 9 வயது வரையுள்ள குழந்தைகளுக்காகவும் 10 வயது முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் படிப்பதற்காகவும் தகுந்த இரு சிறுகதைப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. முதற் பரிசு; இரண்டாம் பரிசு என்று இரு போட்டிகளுக்கும் உண்டு. அவற்றேடு தேர்ந்தெடுக்கப்பட்ட இன்னும் சில கதைகளையும் சேர்த்து சங்கத்தின் சார்பில் புத்தகங்களாக வெளியிடப்படும். முடிவுத் தேதி 30-6-57. கதைகளை, காரியதரிசி, குழந்தை எழுத்தாளர் சங்கம், 10, வைத்தியராமையர் தெரு, சென்னை, 17 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

பள்ளிகள் ஆண்டு விழா

காவேரிப்பாக்கம் உயர்நிலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளிகள் ஆண்டு விழா ஜில்லா போர்டு மெம்பர் எம். ரத்தினவேலு நாயகர் தலைமையில் மே 6-ஆம் தேதி நடந்தது. பனப்பாக்கம் உயர்நிலைப் பள்ளியின் ஆண்டு விழா திரு சடையப்ப முதலியார் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. பல மாணவ மாணவியர் கலாநிகழ்ச்சிகளில் பங்கு கொண்டார்கள்.

கும்பகோணம், பாணதுரை ஹைஸ்கூல் கலைவிழா திறந்தவெளி நாடக அரங்கில் கபிஸ்தலம் மூப்பனர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் அனைவரையும் வரவேற்றர்.

பெரம்பலூர் விவேகானந்தா மாணவர் விடுதி, சரோஜினி மகளிர் இல்லம் இவற்றின் இலக்கியக் கழக ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. மாவட்டக் கல்வி அதிகாரி திரு ஜி. வேதக்கண் அவர்கள் விவேகானந்தர் தகுந்த படத்தைத் திறந்துவைத்தார். மாணவ, மாணவியர் பல கதம்ப நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினர்கள்.

நெல்லிக்குப்பம் தேசீய உயர்துவக்கப் பள்ளியின் புதிய கட்டிடத்தை டாக்டர் ஷர்க்கார் திறந்து வைத்தார். பள்ளி நிர்வாகி டி. கே. ரங்கநாதம் செட்டியார் நன்றி கூறினர்.

தேவகோட்டை திருவள்ளுவர் அருள் நெறி ஆரம்பப் பள்ளியின் பெற்றேர் சங்கத் துவக்க விழா தமிழ் வள்ளல் மெய்யப்ப செட்டியார் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ கிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றர்.

சந்திரமண்டலத்தில் நடப்பது

சந்திரமண்டலத்தில் என்ன நடக்கிறது என்பதை நாம் டெலிவிஷன் (டி. வி.) மூலம் இங்கேயிருந்தவாறே பார்க்கக் கூடும் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகிறர்கள். வான மண்டலத்தில் ஒரு குறிப்பிட்ட உயரத்தில் டெலிவிஷன் கருவியை நிலைத்து நிற்கும்படி அமைத்து, அந்தக் கருவி சந்திரமண்டலத்தில் நடப்பதைப் படமெடுக்கும்போது கீழேயுள்ள டெலிவிஷன் திரையில் அதைப் பார்க்கும்படி செய்ய முடியுமாம். இது பத்து ஆண்டுகளுக்குள் சாத்தியமாகும் என்று அந்த விஞ்ஞானிகள் கருதுகிறர்கள்.

வாழ்த்துக்கு நன்றி

கண்ணனின் தாய்ப் பத்திரிகையான கலைமகளின் வெள்ளி விழாவை முன்னிட்டு வாழ்த்துச் செய்திகள் அனுப்பி, தங்கள் அன்பைத் தெரிவித்துக்கொண்ட எல்லாக் கண்ணன் நேயர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 **இதழ்: 10**

15 - 5 - '57

குழந்தைகளே!	பக்கம்	2
மைக்ரோபோன்	..	3
பலே திருடன்	..	4
துப்பறியும் மோகன்	..	5
ரெயிலே வா, வா!	..	11
பொறுமையே போ!	..	13
யானைக் கதைகள்	..	17
புலி வருதுடோய்!	..	21
சரியான உபதேசம்	..	26
கவியரங்கம்	..	28
அந்தச் சிலை	..	29
நீங்களும் நானும்	..	35
தபால் பெட்டி	..	39

அட்டைப் படம்: போட்டோ, N. ராமகிருஷ்ண

செய்திகள் - 2-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

வேடிக்கைப் புதுமொழிகள்

பேசத் தெரிந்தவன் பேச்சாளி;
இருந்து கேட்பவன் ஏமாளி!

மாதக் கணக்கில் தங்குவதற்கு
இதென்ன
மாமனார் வீடா?

ஓட்டப் பந்தய வீரனா?
கூட்டத்தில் தைரியமாய்ப்
பேசு!

ஆயிரம்பேர் காதைச்
செவிடாக்கியவன்,
அரைப் பாடகன்!

கைதட்டல் கிடைக்காவிட்டா
லும்,
கல்லெறி விழாமல் இருந்தால்
சரி!

மொட்டைத் தலை மூக்காயி
ரெட்டைப் பின்னலுக்கு
ஆசைப்பட்டாளம்!

மலைகளில் மேரு போல;
மனிதரில் நேரு போல!

காந்தீயக் கொள்கைக்கும்
கசாப்புக்கடைக் கந்தனுக்கும்
என்ன சம்பந்தம்?

தந்தி என்றால்
தொந்தி கலங்கும்!

தூக்கம் வரவில்லையா?
துப்பறியும் நாவல் படி!

உயிர் போகும் நேரத்திலும்
தயிர் வடை ஞாபகமா?

கஞ்சிக்கு இல்லாத கட்டைச்
சாமியார்
கஞ்சாவுக்குக் காசு கேட்டா
ராம்!

சொக்காய் பற்றி எரியும்
போது
'ஹுக்கா'வுக்கு நெருப்புக்
கேட்டானும்!

ஆலயத்துக் கேற்ற நந்தி;
அர்ச்சகருக் கேற்ற தொந்தி!

எ. ந. கணபதி.

குழந்தைகளே!

நீங்கள் கதை, கட்டுரைகள் எழுதியனுப்புவதை வரவேற்பதாகச் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தேன். அதன்படி உங்களில் பலரும் இப்போது எழுத முன் வந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இப்பொழுதே தினமும் நூற்றுக் கணக்கான கேள்விகளும் கடிதங்களும் கதைகளும் கவிதைகளுமாக வந்து குவிகின்றன.

இதையெல்லாம் பார்க்கும்போது மிகவும் உற்சாகமாக இருக்கிறது. இந்த நாட்டின் பிற பகுதிகளில் எல்லாம் குழந்தைகள் இவ்வளவு தூரம் முன்னேறி கதை, கட்டுரை, கவிதைகள் இயற்றும் அளவுக்குப் பயிற்சி பெற்றிருப்பதாகத் தோன்றவில்லை. குழந்தைகளின் கற்பனை சக்தியைத் தூண்டுவதற்கான சந்தர்ப்பங்களையும் அங்குள்ள பத்திரிகைகள் ஏற்படுத்தித் தருவதாகத் தோன்றவில்லை. இந்த வகையில் கண்ணன் தன் பங்கைச் சிறப்பாகச் செய்து வருவதாகவே எண்ணுகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்கு முக்கியமான ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சொந்தமாகவும் சிறப்பாகவும் எழுதியனுப்புவதற்குப் பதில் சிலர் பிறருடைய கதைகளை மெதுவாகப் பெயர்த்து எடுத்து எழுதி அனுப்பிவிடுகிறார்கள். எப்படியாவது தன் பெயர் பத்திரிகையில் வந்துவிட வேண்டும் என்ற ஆசைதான் காரணம் என்று நினைக்கிறேன். வெகு நாட்களுக்கு முன்பு வேறு பத்திரிகைகளில் வெளி வந்த கதைகளை அங்கும் இங்குமாகச் சிறிது மாற்றி எழுதியனுப்பி விட்டால் அது சொந்தக் கதையாகி விடுமா? அதனால் என்ன ஆகிறது? எழுதியனுப்பினவர்களுக்கும் கெட்ட பெயர்; பிரசுரித்த எனக்கும் கெட்ட பெயர். ஏன், நல்ல கதைகளைச் சுயமாகவே எழுதியனுப்பக் கூடிய மற்ற குழந்தைகளுக்கும் கெட்ட பெயர்தான் தமிழ் நாட்டில் எல்லாக் குழந்தைகளுமே இப்படித்தான் போலிருக்கிறது என்று மற்றவர்கள் எண்ண இடம் கொடுத்து விட்டால் சொந்தமாக எழுதினவர்கள், திருடி எழுதினவர்கள் எல்லாருக்குமே கெட்ட பெயர்தானே?

பல முறை எச்சரிக்கை செய்திருந்தும் சமீபத்தில்கூடச் சிலர் இந்த முறையில் நடந்துகொண்டிருப்பது வருந்தத் தக்கது: அது மட்டுமல்ல; கண்டிக்கத் தக்கதுமாகும். உங்கள் கதைகள் சாதாரணமாக இருந்தால் கூடப் போதும்; நான் பிரசுரிக்கத் தயார். ஆனால் பிறர் எழுதினதைக் காப்பியடித்து மட்டும் அனுப்பிவிடாதீர்கள். கண்ணிலே எண்ணெயை விட்டுக்கொண்டு எத்தனையோ ஜாக்கிரதையாக இருந்தாலும் இந்த மாதிரித் தவறுகள் நேர்ந்துவிடுகின்றன. ஆகவே இவர்கள் விஷயத்தில் இனிச் சலுகையே காட்டுவதற்கில்லை. தமிழ் நாட்டுக் குழந்தைகளின் நற்பெயரைக் காப்பாற்றும்படி அவர்களை இறுதியாக எச்சரிக்கிறேன். இதையும் செவியில் போட்டுக்கொள்ளவில்லையென்றால் அவர்கள் எழுதும் கதையோ கட்டுரையோ எந்தப் பத்திரிகையிலும் வெளிவராத நிலை ஏற்பட்டுவிடும் என்பதை நினைவில் கொள்ளவும்.

கண்ணன் சித்திரப் போட்டியில் பழைய அங்கத்தினர்களாயினும் புதிய அங்கத்தினர்களாயினும் மூன்று கூப்பன்களைச் சித்திரத்தோடு இணைத்து அனுப்புபவர்கள்தான் கலந்துகொள்ளலாம். அதாவது யார் வேண்டுமானாலும் கலந்து கொள்வதில் எங்களுக்குத் தடையில்லை. ஆனால் 1 5-57., 15-5-57., 1-6-57., 15-6-57 ஆகிய நான்கு இதழ்களில் வெளிவரும் மூன்று கூப்பன்களைத் தொடர்ச்சியாக அனுப்புபவர்கள் அனைவருமே அங்கத்தினர்களாகக் கருதப்படுவார்கள். 3 கூப்பன்கள் இல்லாத சித்திரங்கள் போட்டியில் சேர்க்கப்பட மாட்டா.

ஜூன் மாத முதல் இதழில் சித்திரத் தொடர் கதையான கடற்புலி ஆரம்பமாகிறது. ஆச்சிரியமான நிகழ்ச்சிகளும், சாகஸமான சம்பவங்களும் விறு விறுப்பான கதைப் போக்கும் கொண்ட சரித்திர காலத்துக் கதை கடற்புலி. இதுவரையில் சந்தாதார்களாகச் சேராதவர்களுக்கு இது நல்ல சந்தர்ப்பம்!

—ஆசிரியர்.



மைக்ரோபோன்

மூர்த்தி

பிளேடுகளைக் கொண்டு சுவாரசியமான சில பொருள்கள் செய்யலாம். சில நாட்களுக்குமுன் உடைந்த பிளேடைக் கொண்டு ரப்பர் ஸ்டாம்புகள் தயாரிக்கும் விதத்தை அறிந்தீர்கள். இப்போது உடையாத பிளேடுகளைக் கொண்டு சாதாரணமான கருவி ஒன்று அமைப்பதைப் பற்றிச் சொல்கிறேன்.

நீங்கள் எல்லோரும் டெலிபோனில் பேசியிருப்பீர்கள். அதிலுள்ள வாய்க்குழாயைத்தான் மைக்ரோபோன் (Microphone) என்று சொல்லுவார்கள்.

இதை அமைக்க வேண்டியவை யெல்லாம் மிக எளிதில் கிடைக்கக் கூடியவையே. இரண்டு பிளேடுகள். இவற்றை ஒரு சாக்பீஸ் பெட்டி அல்லது ஒரு கனமான அட்டைப் பெட்டியின்மீது சுமார் இரண்டங்குல இடைவெளியில் படத்தில் காட்டியிருப்பதுபோல் பொருத்த வேண்டும். பிளேடுகள் லேசில் கீழே விழுந்து விடாமல் இருக்கும்படி அழுத்தமாக அமைக்கப்பட வேண்டும்.

ஒரு கார்பன் தண்டை இந்தப் பிளேடுகளின்மேல் வைக்க வேண்டும். கார்பன் தண்டு எங்கே கிடைக்கும் என்று தானே கேட்கிறீர்கள்? வீணாகப் போன பாட்டரி ஸெல்கள் இருக்கின்றனவல்லவா? அவற்றை உடைத்தால் உள்ளே சுமார் மூன்றங்குல நீளமுள்ள கரிக்கட்டை கிடைக்கும். இது போதுமானது.

இப்போது உங்களுக்கு மைக்ரோபோன் தயாராகிவிட்டது. பிளேடுகளினின்றும் இரண்டு கம்பிகளை இணைத்து அவற்றைப் படத்தில் காட்டியிருப்பதுபோல் ஒரு காதொலிக் கருவிக்கும் (Earphone) ஒன்று அல்லது இரண்டு பாட்டரி ஸெல்களுக்கும் இணைக்கவேண்டும்.

இந்தமாதிரி அமைக்கப்பட்டபின் பெட்டியின்மேல் சிறிது தட்டினாலும் அது காதொலிக் கருவியில் நன்றாகக் கேட்கும். காதொலிக் கருவியைப் பெட்டியினின்று வெகு தூரத்தில் வைத்துவிடுங்கள். இப்போது பிளேடுகளின் அருகே இருந்து பேசினால் அது காதொலிக் கருவியில் கேட்கும்.

பலே திருடன்!

காலை வேளை. மார்க்கெட் ஒன்றில் ஜனநெரிசல் அதிகமாக இருந்தது. இந்தச் சமயத்தில் ஜேபடித் திருடன் ஒருவன் தம் கைத் திறனைக் காண்பித்து பொருள் சம்பாதிப்பதில் முனைந்திருந்தான். தற்செயலாக மார்க்கெட்டுக்குள் நுழைந்த போலீஸ்காரன் ஒருவன் அந்தத் திருடனைக் கையும் களவுமாகப் பிடித்துக்கொண்டான்.

திருடனை ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லும் வழியில் காபி ஹோட்டல் ஒன்றைக் கண்டான் திருடன். போலீஸ்காரனிடம், ''ஐயா, வயிறு ரொம்பவும் பசிக்கிறது. ஒரு நிமிஷம் என்னை விடுங்கள். ஹோட்டல் உள்ளே சென்று இரண்டு வடை வாங்கிக்கொண்டு உடனே வந்துவிடுகிறேன். நீங்கள் வேண்டுமானால் வாசலிலேயே நில்லுங்கள்'' என்று கேட்டான். திருடனானாலும் வயிற்றுப் பசி என்றால் அவன் மீது இரக்கம் கொள்வதுதானே பண்பு? ஆகையால் போலீஸ்காரனும் அதற்குச் சம்மதித்தான்.

போலீஸ்காரன் வாசலில் அவன் வரவுக்காகக் காத்திருந்து பார்த்தான். வரும் வழியைக் காணோம். உள்ளே சென்று விசாரித்தபோதுதான் அவனுக்கு விஷயம் விளங்கிற்று. திருடன் தோட்டத்து வழியாகச் சென்றுவிட்டான் என்று. போலீஸ்காரன் அந்த ஊருக்குப் புதிது. ஆகையால் அவன் இதை முதலில் எதிர்பார்க்கவில்லை.

சில தினங்களுக்குப் பிறகு அந்தப் போலீஸ்காரன் அதே திருடனை மறுபடியும் பிடித்துவிட்டான். அதே வழியாகச் சென்றபோது திருடன், ''ஐயா, வயிறு பசிக்கிறது. ஹோட்டலில் இரண்டு வடை வாங்கி வந்துவிடுகிறேன்'' என்று உள்ளே சென்றான். இந்தத் தடவை போலீஸ்காரன் சாமர்த்தியமாகத் தோட்டத்துப் பக்கம் முன்னதாகவே போய்க் காத்திருந்தான். ஆனால் வெகு நேரம் ஆகியும் திருடன் வரவில்லை. உள்ளே சென்று விசாரிக்கவே அவன் முன் வாசல் வழியாகத் தப்பிவிட்டான் என்று தெரிந்தது. கொஞ்ச நாட்கள் சென்றன. மூன்றும் முறையாக அதே திருடன் அதே போலீஸ்காரனிடம் சிக்கிக்கொண்டான். வழக்கம் போல ஹோட்டல் வாசலை அடைந்ததும், ''ஐயா, வயிறு பசிக்கிறது'' என்று ஆரம்பித்தான் திருடன், மெல்லிய குரலில்.

போலீஸ்காரன் பார்த்தான். ''டேய், இந்தத் தடவை நீ என்னை ஏமாற்ற முடியாது. காசை என்னிடம் கொடுத்துவிட்டு இங்கேயே நில். நான் போய் வடையை வாங்கிக்கொண்டு வருகிறேன்'' என்றான். அப்படியே வடையை வாங்கிக்கொண்டு வந்து பார்த்தான் போலீஸ்காரன். திருடனுக்குப் பைத்தியமா என்ன, போலீஸ்காரன் வரும் வரையில் அவன் அங்கேயே காத்திருக்க?

துப்பறியும் மோகன்

தே. பார்த்தசாரதி

அந்தக் கறுப்புக் கண்ணுடி அணிந்த இளைஞனின் இரண்டாவது கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் மோகன் மருள மருள விழித்தான். தன் இடத்தை விட்டு எழுந்திருந்தான்.

''சரிதான், அப்படியே உட்கார்! ....நான் கேட்பதற்குப் பதில் சொல்: பரீட்சையில் பெயிலானுல் எந்த அப்பாவுக்கும் கோபம் வருவது நியாயந்தானே?''—அந்த இளைஞன் கேட்ட கேள்வியில் அதிகாரமும் மிரட்டலும்கூட காணப்பட்டது.

மோகனுக்கு நா வறண்டது. தன் கதையையெல்லாம் அந்த இளைஞனிடம் சொல்லித் தன் மனச் சுமையைக் குறைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. தன் தைரியத்தையெல்லாம் ஒன்று சேர்த்து மெல்லிய குரலில், ''ஸார், இதையெல்லாம் யார் உங்களுக்குச் சொன்னுர்கள்?'' என்று கேட்டான். இதைக் கேட்பதற்குள் அவன் பட்டபாடு!

''இதோ இவர்தான் சொன்னுர்.''

தன் பக்கத்தில் கிடந்த உள்ளூர்த் தினசரியைப் பிரித்து அதில் ஒரு குறிப்பிட்ட இடத்தைக் காட்டினுன் அவன். அந்த இடத்தில் மோகனின் புகைப்படம் ஒன்று பிரசுரம் செய்யப்பட்டிருந்தது. அதன் கீழே அவன் பெயர், வயது, உயரம், அடையாளம், ஓடிவிட்டதற்குக் காரணம் எல்லாம் எழுதப்பட்டு, கண்டு பிடிப்பவருக்குத் தக்க பரிசு உண்டு என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தப் புகைப் படத்தை மனத்தில் வைத்துக் கொண்டுதான் அந்த இளைஞன் தன்னை இன்னுரென்று கண்டுபிடித்திருக்கிறுன் என்றெண்ணியபோது அவனுக்குப் பயமும் ஏற்பட்டது. இப்போது அந்த இளைஞன் தன்னைக் காட்டிக்கொடுத்து விட்டால்..?

அந்த விளம்பரத்தைப் பார்த்ததும் அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. 'அப்பா அந்த இரவிலேயே உள்ளூர்ப் பத்திரிகைக் காரியாலயத்துக்கு ஓடி, இந்த விளம்பரத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அப்பாவுக்கு என்னிடம் எவ்வளவு அன்பு! இவர்களை விட்டுவிட்டு நான் ஓடி வந்தது சரியா? அம்மா, பாவம்: இப்போது என் பிரிவினுல் எவ்வளவு கஷ்டப்படுகிறுளோ! ஆனுல் நான் செய்ததில் ஒரு தவறுமில்லை' என்ற எண்ணமும் கூடவே தோன்றிற்று. கையில் பத்திரிகையைப் பிடித்தபடி, பரிதாபமாக அந்த இளைஞனைப் பார்த்தான் மோகன்.

அப்போது அவன் ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டான்.

''மோகன், இப்போது என்ன சொல்கிருய்?..நீ இம்மாதிரித்

தாய் தந்தையரைத் தவிக்கவிட்டு ஓடிவந்தது சட்டத்திற்கே விரோதமானது. தெரியுமா? உன்னை வீட்டில் ஒப்படைத்து நான் பரிசு பெறப் போவதில்லை..அதற்குப் பதிலாக உன்னைப் போலீஸிடமே ஒப்புவிக்கப் போகிறேன்..'' என்று சொன்னபடியே அந்த இளைஞன் தன்னிடத்தைவிட்டு எழுந்துவிட்டான். அவன் கை கறுப்புக் கண்ணாடியைச் சுழற்றிய வண்ணம் இருந்தது.

அப்போது ரெயில் எழும்பூருக்கு முந்திய ஸ்டேஷனில் நின்றிருந்தது. மோகன் துடிதுடித்தபடி, ''ஸார், ஸார்! போலீஸிடம் சொல்ல வேண்டாம், ஸார்'' என்று பரிதாபமாகக் கெஞ்சினான். தான் இத்தனை தூரம் ஓடி வந்ததெல்லாம் வீணாகப் போகிறது என்பதை எண்ணிப் பார்த்தபோது அவன் மனம் படபடத்தது. அந்த இளைஞன் அவனைப் போலீஸிடம் ஒப்புவித்தால், போலீஸார் அவனை அவன் பெற்றோரிடம் சேர்த்து விடுவார்கள். அவனைக் கண்டதும் அவன் அப்பாவுக்கு மறைந்த கோபமெல்லாம் மீண்டும் பொங்கியெழும். பழைய கதைதான்! 'இந்த முரட்டு ஆள் யாரோ தெரியவில்லையே! இவனிடம் வந்து அகப்பட்டுக் கொண்டோமே!' என்று அவன் துடித்தான்.

அந்த இளைஞன் மோகனை லட்சியம் செய்யவில்லை. விடு விடுவென்று எழுந்து எதிர்ப்பக்க ஜன்னலில் சாய்ந்து கொண்டு வெளியே பார்த்தான். அங்கே ஒரு இன்ஸ்பெக்டர் நின்று கொண்டிருந்தார். இளைஞன், ''ஸார், ஒரு முக்கியமான கேஸ். இங்கே வருகிறீர்களா?'' என்று கை தட்டி அழைத்தான். மோகனுக்குப் பயத்தால் உடல் நடுங்கியது. போலீஸிடம் அகப்பட்டுக் கொண்டால் அப்புறம் தண்டனை, உதை, அவமானம்!..

இன்ஸ்பெக்டர் அந்த இளைஞனைப் பார்த்ததும், ''அடடே, நீங்களா?'' என்று கேட்டுவிட்டு ஒரு சல்யூட் அடித்தார். ''இப்படி உள்ளே வாருங்கள்'' என்று இளைஞன் அழைத்ததும், இன்ஸ்பெக்டர் உள்ளே வந்தார். மோகன் பயத்துடன் விழித்தான்; அவன் கால்கள் நடுங்கின.

''இதோ, இவனை 'அரெஸ்ட்' பண்ணுங்கள்''

அந்த இளைஞன் சுட்டிக் காட்டியது மோகனையல்ல; மேல் 'பெர்த்'தில் படுத்திருந்த கிருதா மீசை ஆசாமியை! அந்த ஆசாமியின் கையிலிருந்து ஒரு 'பிளேடு' நழுவிக் கீழே விழுந்தது!

இன்ஸ்பெக்டர் அந்த ஆசாமியின் கைகளைக் கெட்டியாகப் பிடித்தார். அப்போது அந்த இளைஞன், பக்கத்தில் உட்கார்ந்திருந்த 'அரைத் தூக்க' ஆசாமியை நோக்கி, ''ஏன் ஐயா, உங்கள் பெட்டியைப் 'பெர்த்'தின் மீது வைத்துவிட்டு 'ஹாய்'யாகக் கவலை விட்டது என்றிருக்கிறீர்களா? அப்படி இருந்தால் உம் பெட்டியில் உள்ள பணம் உம்மை விட்டுப் போய்விடுமேய்யா! இவன் நைசாகப் பிளேடினால் கொஞ்சம் கொஞ்சமாகத் தோல் பெட்டியைக் கீறி, துளை செய்து பணத்தை எடுக்க முயற்சிப்பதைக்கூடக் கவனிக்காமல் என்ன ஐயா தூக்கம்?..'' என்று கேட்டான். அந்தக் 'கிருதா மீசை'யை நோக்கி, ''ஏம்ப்பா ஏழுமலை, நீ ஜிப்பா போட்டுக் கொண்டு மீசை ஒன்றை ஒட்ட வைத்துக்கொண்டால் உன் முகச் சாயலே அடியோடு மாறிப் போய்விடும் என்று நினைத்தாயா?'' என்று அதட்டினான்.

ஏழுமலை என்ற அந்தக் கேடியை நோக்கி, இன்ஸ்பெக்டர், ''ஏண்டா, ராஸ்கல்! நம்ம ஸி. ஐ. டி. சிவசாமி சாருக்கு எதிரிலேயே உன் வேலைத்தனத்தைக் காட்ட நினைத்தாயா?'' என்று கேட்டுவிட்டு, பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த இரண்டு கான்ஸ்டபிள்களைக் கை தட்டி அழைத்தார்.

அதற்குள் அந்த வேடிக்கையைப் பார்க்க அங்கே ஒரு பெருங்கூட்டம் கூடிவிட்டது. ''என்ன ஸார், விஷயம்?'' என்று ஒருவர் மற்றொருவரை விசாரித்தார்; அதற்குப் பதிலாக மற்றவர் உதட்டைப் பிதுக்கி விட்டு, இன்னும் தீவிர

மாக வேடிக்கை பார்ப்பதில் முனைந்தார். விஷயம் இன்ன தென்று ஒருவருக்காவது சரியாகத் தெரியவில்லை.

இந்தக் கோலாகலத்தினிடையே கான்ஸ்டபிள் இருவரும் கேடி ஏழுமலையைப் பிடித்துக்கொண்டு இறங்கினார்கள். இன்ஸ்பெக்டர் ஸி. ஐ. டி. சிவசாமி என்ற அந்த இளைஞனுக்கு நன்றி கூற எண்ணித் திரும்பிப் பார்த்தார். ஆனால், அங்கே சிவசாமியும் இல்லை: யோக னும் இல்லை!

ரெயிலும் அப்போது தன் பிரயாணத்தைத் தொடர்ந்தது.

4. ஸி. ஐ. டி. சிவசாமி

பரந்து கிடக்கும் இவ்வுலகத்தில் உள்ள மற்றப் பிராணிகளுக்கும் மனிதனுக்கும் ஒரு முக்கிய மான வேறுபாடு உண்டு. அதுதான் பகுத்தறிவு என்பது. பகுத்தறிவு மனிதர்களுக்கு மட்டும் கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு தனிச் செல்வம்; மற்ற மிருகங்களுக்குப் பகுத்தறிவு கிடையாது.

இந்தப் பகுத்தறிவை மனிதன் நல்ல வழியிலே செலுத்தினால், இந்த உலகத்தையே என்று சுக மாக வாழலாம்: தனக்கு வேண்டிய செளகரியங்களைத் தானே படைத்துக் கொள்ளலாம். இந்த இருபதாம் நூற்றாண்டில் பலவித செயற்கை வசதிகளுடன் நாம் வசிப்பதற்குக் காரணமே இந்த பகுத்தறியும் குணம்தான். உலகத்

தையே ஒரு நொடியில் அழிக்க வல்ல அணுக்குண்டுகூடப் பகுத்தறிவின் விளைவே. மனிதனைத் தவிர வேறு எந்த மிருகத்தினுலாவது இத்தகைய ஓர் அணுக் குண்டைச் செய்ய முடியுமா!

ஸி. ஐ. டி. சிவசாமிக்கு இந்தப் பகுத்தறிவு ஓரளவு அதிகமாகவே இருந்தது என்று சொல்ல வேண்டும். ஒவ்வொரு கேடியின் பெயரும் விலாசமும் அவனுக்கு மனப்பாடம். அலட்சியமாக இருப்பது போல் காட்டிக்கொள்வான். ஆனுலும், ஓர் ஆளைப் பிடிக்கவேண்டும் என்று மனத்தில் நினைத்துவிட்டால் இடைவிடா முயற்சியுடன் நின்று அந்த ஆளைப் பிடித்தே தீருவான். ஓர் ஆசாமியின் முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே 'இவன் இப்படிப்பட்டவன்' என்று கணக்காகக் கண்டறிந்து சொல்லுவான்.

எந்த ஒரு விஷயத்திற்காகவும் எப்பொழுதும் அவன் கவலைப்பட்டது கிடையாது. அவன் நல்லவனுக்கு நல்லவன்; போக்கிரிக்குப் போக்கிரி. கேடிகள் அவனைக் கண்டு அஞ்சி விலகுவார்கள்; ஆனுல், சிவசாமி எந்தக் கேடியையும் கண்டு தூர விலகிப் போனது கிடையாது. கேடிகளைக் கண்டால் 'நீங்கள்தான் என் நண்பர்கள்' என்று வேடிக்கையாகச் சொல்வான்.

மோகனைப் பார்த்த மாத்திரத்தில் அவன்மீது சிவசாமிக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் விழுந்தது; அதைத் தொடர்ந்து 'இந்தச் சிறுவனை நம்முடைய 'அஸிஸ்டண்ட்' ஆக ஆக்கிக் கொண்டால் என்ன?' என்ற நல்ல யோசனையும் தோன்றியது. பிறகுதான் அவனைப் போலீஸில் பிடித்துக் கொடுப்பதாகப் பயமுறுத்திவிட்டு, ஏழுமலையைக் கையும் களவுமாக இன்ஸ்பெக்டரிடம் ஒப்புவித்தான்.

அதற்குள் அங்கே ஒரு பெருங் கூட்டம் கூடி விட்டபடியால், அதற்குமேல் தான் அவ்விடத்தில் இருப்பது சரியல்ல என்று அவனுக்குப் பட்டது. உடனே, யாருக்கும் தெரியாமல், இன்ஸ்பெக்டர் கண்களிலும் மண்ணைத் தூவி விட்டு, மோகனின் கையைப் பிடித்திழுத்துக் கொண்டு 'மளமள' வென்று அந்தக் கூட்டத்திலேயே சென்று மறைந்தான்.

மோகனை இப்போது பலவித உணர்ச்சிகள் ஆட்கொண்டன. சிவசாமியிடம் அவனுக்கிருந்த பயம் இப்போது மறைந்துவிட்டது. அதற்குப் பதிலாகத் தந்திரமாக ஒரு கேடியைப் பிடித்துக் கொடுத்த சிவசாமியினுடைய சாமர்த்தியத்தை எண்ணி அவனுக்கு வியப்பே மேலிட்டிருந்தது. ஆனுலும், தன்னை இப்போது மளமளவென்று எங்கே இழுத்துக்கொண்டு போகிருரே என்ற அச்சமும் இருந்தது. பசி வேறு வயிற்றைக் கிள்ளியது.

அவன் மனத்தை அறிந்தவன் போல் சிவசாமி, ''மோகன், பசியைப் பொறுத்துக்கொள். இன்னும் கொஞ்ச தூரந்தான்'' என்று சொல்லிவிட்டு வேகமாக நடக்கலானுன்.

சற்று தூரத்தில் ஒரு பெரிய ஹோட்டல் இருந்தது. சிவசாமி மோகனைப் பிடித்து அழைத்துக் கொண்டு அந்த ஹோட்டலுக்குள் நுழைந்தான். அந்த ஹோட்டலின் பெயர் 'ஹோட்டல் கைலாஸ்' என்பது. அது பிரம்மாண்டமான ஹோட்டல். அதைப் பார்த்து மலைத்து நின்ற மோகனுக்கு, அங்கே பெரும் பணக்காரர்கள் மட்டுமே வருவார்கள் என்று தோன்றியது.

சிவசாமியும் மோகனும் ஒரு மேஜையின் ஒரு பக்கத்தில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டனர். அதே மேசையின் மற்றொரு பக்கத்தில் இருந்த இரண்டு நாற்காலிகளில் இரண்டு குள்ளமான ஆசாமிகள் உட்கார்ந்து ரகசியக் குரலில் என்னவோ பேசிக்கொண் டிருந்தனர்.

''வாங்க ஸார், சௌக்கியமா? எங்கே ரொம்ப நாளாகக் காணேம்?'' என்று வெகுநாள் பழகியவனைப்போல ஓடி வந்தான் ஒரு சர்வர்.

''சரி, உங்கள் ஹோட்டலில் இன்றைக்குச் செய்தது சூடாக இருந்தால் கொண்டுவா!'' பிறகு சிவசாமி மோகனைச் சுட்டிக்

காட்டி, ''இவன் நம்ம பையன், நன்றாகக் கவனி'' என்று கூறினான். சர்வர் சிரித்துவிட்டு நகர்ந்தான்.

இதற்குள் அவன் எதிரில் உட்கார்ந்திருந்த இரண்டு குள்ளர்களும் சிவசாமியை ஓரக் கண்ணால் பார்த்துவிட்டு அந்த நாற்காலியை விட்டு எழுந்து வேறு இடத்துக்குப் போக முயன்றனர். அதைக் கவனித்த சிவசாமி அவர்களில் ஒருவன் கையை அழுத்தி அதே நாற்காலியில் உட்கார்த்தி வைத்தான். ''சரிதான், இப்படியே உட்கார்ந்து பேசு, காளிமுத்து! நான் என் டிபனைக் கவனிப்பேனா, நீங்கள் பேசுவதைக் கவனிப்பேனா!.. நீங்கள் பாட்டுக்குப் பேசுங்கள்!'' என்றான். காளிமுத்து சாமியை ஒரு முறை முறைத்தான். வேறு ஒன்றும் வழியில்லாதலால் அங்கேயே உட்கார்ந்துகொண்டனர் இருவரும். கடைசியில் சிவசாமியும் மோகனும் அந்த இடத்தை விட்டு எழுந்து போகும்வரை காளிமுத்துவும் அவன் நண்பனும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை!

* * *

''**வா**ங்க, மிஸ்டர் சாரங்கபாணி! எங்கே வராமலே இருந்துவிடுவீர்களோ என்று நினைத்தேன்'' என்று கூறியபடியே வரவேற்றான் சிவசாமி.

சப் - இன்ஸ்பெக்டர் தலைப்பாகையைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டு, ''நீ கூப்பிட்டவுடனே ஓடி வருவதைவிட வேறு என்ன பிரமாத வேலை எனக்கு! வீட்டிலே மைசூர்ப்பாகு டிபன் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். உன்னிடமிருந்து தகவல் வந்தது. உடனே, கிடுகிடுவென்று டிபனைக் கூட விட்டுவிட்டுக் கிளம்பி வந்துவிட்டேன்'' என்றார்.

''நான் இப்போது உங்களைக் கூப்பிட்டது ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லவே'' என்றான் சிவசாமி.

''அப்படி என்ன முக்கியமான விஷயம்? 'மரீனா மர்டர்'லே எதாவது துப்புக் கிடைத்துவிட்டதோ?'' என்று கேட்டுக்கொண்டே சிவசாமிக்கு எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார் சப்-இன்ஸ்பெக்டர்:

''ஊன் ஹூனானாம். இந்தப் பசங்க என்னைப் பார்த்துன்னா கார்டூன் பொம்மை மாதிரி இருக்கேன்னு கோட்டா பண்றான்கள்! விட்டேனா பார்!''

''அதையும்விட முக்கியமான விஷயம்'' என்று கூறிய சிவசாமி உள் பக்கம் திரும்பி, ''மோகன்!'' என்று அழைத்தான். ''இதோ வருகிறேன் சார்!'' என்ற பதில் உள்ளேயிருந்து வந்தது. அடுத்து அங்கே மோகன் நின்றான்.

மோகனை உற்றுப் பார்த்த சாரங்கபாணி, ''ஓ, மை காட்! இந்தப் பையன் யார்? உனக்கு ஒரு தம்பி இருப்பதாக நீ என்னிடம் சொல்லவேயில்லையே!'' என்று வியப்புடன் கூறினார்.

''எனக்குத் தம்பி இருந்தால் அல்லவா உங்களிடம் நான் சொல்வேன்?'' என்றான் சிவசாமி.

''அப்படியானால் இவன் உன் தம்பி இல்லையா? அப்போ இந்தப் பையன்...?'' என்று மணிப்பிரவாளமாகக் கேட்டார் சாரங்கபாணி.

''இவன் என்னுடைய 'அஸிஸ்டண்ட்' '' என்று சிவசாமி அறிமுகப் படுத்தினான்.

''உன்னுடைய உதவியாளனா?.. தம்பி, உன் பெயர் என்ன?'' என்று மோகனை வினவினார் அவர்.

''மோகன், சார்.''

''ஆல் ரைட், மோகன்!.... உன்னை அதிர்ஷ்டசாலி என்று தான் சொல்ல வேண்டும். போலீஸ் இலாகாவில் நாங்கள் எவ்வளவோ பேர் மிஸ்டர் சிவசாமியிடம் 'ட்ரெயினிங்' பெறமாட்டோமா என்று ஆசைப் படுகிறோம். அந்தப் பேறு உனக் குக் கிடைத்திருக்கிறது ...அது இருக்கட்டும். மோகன், நீ எப்படி இவரிடம் வந்து சேர்ந்தாய்?''

மோகன் திணறினான். சிவசாமி குறுக்கிட்டு, ''அந்தப் பூர்வோத்த ரத்தையெல்லாம் கேட்டுக்கொண் டிருக்க வேண்டாம். நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுதான், மோகனையும் நம்ம 'கிரிமினல் இன்டெலிஜண்ட்ஸ் டிபார்ட் மெண்ட்'டில் சேர்த்து விடுவது தான் நீங்கள் உடனே செய்ய வேண்டும். இன்று முதல் மோக னும் ஒரு குட்டி ஸி. ஐ. டி. என்று நினைவில் வைத்துக் கொள்ளுங் கள்'' என்றான்.

''உன் பேச்சுக்கு மறு பேச்சு ஏது? நான் யாரிடமும் எதிர்த்துப் பேசுவதில்லை - வீட்டிலே என் மனைவியிடம்கூடத்தான்'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் சாரங்க பாணி.

''அதுதான் நீங்கள் ஒரு கேஸ் கூடப் பிடிப்பதில்லை போலிருக் கிறது!'' என்றான் சிவசாமி உஷ்ண மாக.

சாரங்கபாணி அதை வித்தியாச மாக எடுத்துக் கொள்ளாமல், ''சரி, சிவசாமி! காபி கொண்டு வரச். சொல்லேன்!'' என்றார்.

''ஓஹோ, உம்ம ஒசிக் குணத்தை என்னிடமே காட்டுகிறீரோ!'' என்று நகைத்தபடி கூறிய சிவசாமி காப்பி வாங்கி வரும்படித் தன் பணியாளுக்கு உத்தரவு கொடுத்தான்.

சாரங்கபாணி சாதாரணமான குடும்பத்தில் பிறந்தவர். உயர் நிலைப்பள்ளிப் படிப்பு வரை அங் கேயே படித்து முடித்துவிட்டார். பிறகு கல்லூரியில் படிக்கச் சென்னைக்கு வந்தார். மற்றப் பிள்ளைகள் 'கிராப்' வைத்துக் கொண்டிருக்கும் போது, தான் மட்டும் குடுமி வைத்துக்கொண்ட டால் மற்றப் பிள்ளைகள் கேலி செய்வார்கள் என்று பயந்து, தன் தலையில் சிரங்கு வந்து விட் டது என்று தகப்பனாருக்கு எழுதி, அவர் அனுமதியைப் பெற்று 'கிராப்'பும் வைத்துக் கொண்டு விட்டார். தான் நாகரிகமாக இருக்க வேண்டும் என்று எண்ணி முதலில் பவுடர் வாங்கினார், அப்புறம் சோப்பும் சீப்பும் வாங்கி னார்; அப்புறம் ஸ்னோ, ஷேவிங் ஸெட் எல்லாம் வாங்கினார்; சூட்கேஸ் வாங்கினார்: பாண்ட், பூட்ஸ் வாங்கினார்: டை வாங்கி னார். பலே 'ஸ்டைலிஷ்' ஆளாக ஆகிவிட்டார்!

அவருக்கு இன்ஸ்பெக்டர் உத் யோகம் கிடைத்தது முதல், அவ ரிடம் ஒரு குணம் ஏற்பட்டது. அறியாத ஜனங்களைத் தன் 'போலீஸ் டிரஸ்' மூலமாக அதட்டி மிரட்டித் தன் சொந்தக் காரியங் களைச் சாதித்துக்கொண்டு விடு வார். அவருடைய மோட்டார் சைக்கிள் ஸீட்டுக்குக் கவர் போட வேண்டுமானால் அந்தக் கடைக்குப் போய், தடபுடலாக அதட்டுவார். கடைசியில் அந்தக் கடைக்கார னிடம் இனமாகக் கவர் போட்டுக் கொண்டு வந்து விடுவார்!

ஆனால், அவரிடம் எப்போதும் ஒரு குணம் இருந்தது. யாராவது சாமியார்களைக் கண்டால் உடனே விழுந்து நமஸ்கரிக்கத் தொடங்கி விடுவார். அவர்களிடம் அவருக்கு அவ்வளவு மதிப்பு. சோதிடத்தில் அவருக்கு எல்லையற்ற நம்பிக்கை இருந்தது.

சிவசாமியுடனும் மோகனுட னும் சிறிது நேரம் உல்லாசமாகப் பேசிக்கொண் டிருந்துவிட்டுச் சாரங்கபாணி தம் வீட்டுக்குக் கிளம்பினார்,

(தொடரும்)

ரெயிலே வா வா!

'சசிதேவன்'

ரெயிலே வா வா, ரெயிலே வா வா
ரெயிலே ரெயிலே வா!
கடகட குடுகு கடகட குடுகு
ரெயிலே ரெயிலே வா!

கூகூவென்றே கூய் கூய் என்றே
கூவி முழுங்கியே வா!
வேகம் இன்னும் மிகவே மின்னல்
வேகம் தோற்றிட வா!

படரும் கொடிபோல் வளைந்து வளைந்து
பாயும்ரெயிலே வா;
பாம்பின் உடல்போல் நெளிந்து நெளிந்து
பறக்கும் ரெயிலே வா!

கொளுத்தும் வெயிலைச் சகித்துக்கொண்டு
குவலயம் சுற்றுகிறாய்.
கொட்டும் மழையைச் சட்டை செய்யாமல்
'குஷி'யாய்ச் செல்லுகிறாய்!





கொட்டும் மழையும், கொளுத்தும் வெயி
கொண்டால் நோய்கள் வரும்! [லும்
சற்றும் இதனைச் சிந்தித்தாயோ?
சங்கடம் உணர்ந்தாயோ?

ஊர் ஊராகப் போகும் ரெயிலே
உனக்கும் அலுக்காதோ?
ஓயா தொழியா தோடும் உன்றன்
உடலும் வலிக்காதோ?

ஆயிரம் ஆயிரம் மக்களை ஏற்றி
அயராது எங்கணுமே,
போயிடும் உன்னைப் பொறுமைக் கடல்எனப்
போற்றிடுவேன் ரெயிலே!

ரெயிலே வா வா, ரெயிலே வா வா
ரெயிலே ரெயிலே வா!
கடகட குடுகு கடகட குடுகு
ரெயிலே! ரெயிலே வா!



“நம் பள்ளியில் நடக்கப் போகும் நாடகத்தில் இரட்டையர்கள் பாகத்திற்கு மணியையும் சுந்தரத்தையும் சிபாரிசு செய்யப் போகிறேன்” என்றார் தமிழ் உபாத்தியாயர்.

மணியும், சுந்தரமும் நாணத்தால் தலை குனிந்தனர். இரட்டையர்களைப் போலவே அவர்கள் பழகுவார்கள். இருவரும் அண்டை வீட்டுக்காரர்கள். ஏழைமையின் முத்திரையும் இருவருக்கும் பொது. பள்ளிக்குச் செல்லும் போதும், திரும்பிவரும்போதும், விளையாடப் போகும் போதும் இருவரும் கை கோத்துச் செல்வார்கள். உள்ளப் பண்புகளும் அப்படியே இணைந்து காணப்பட்டன.

ஒரு நாள் காலை எட்டு மணி இருக்கும். பக்கத்து வீட்டிலே ஏதோ கார் சப்தம் கேட்கிறதே என்று சுந்தரம் வாசலுக்கு வந்து பார்த்தான். மணி வீட்டு வாசலில்தான் கார் வந்து நின்றது. அதிலிருந்து பெட்டி, படுக்கைகளுடன் ஒருவர் இறங்கினார். மணியும், அவன் தந்தையும் அவரை வரவேற்றனர்.

பிறகு சுந்தரம் உள்ளே போய்விட்டான். மணி ஒன்பதரையாயிற்று. வழக்கம்போல் சாப்பிட்டுவிட்டு மணி வீட்டிற்குச் சென்று அவனைப் பள்ளிக்கு அழைத்தான். மணி சிரித்துக் கொண்டே, “சுந்தரம், இன்னிக்கு நான் பள்ளிக்கூடம் வர மாட்டேன். எங்கள் மாமா பம்பாயிலிருந்து வந்திருக்கிறார். அவரை அழைச்சிண்டு நான் வெளியிலே போகணும்” என்றான் மணி.

“அப்படீன்னா நானும் லீவு...” என்றான் சுந்தரம். “சே! சே! நீ போய்ட்டு வா” என்று கூறிவிட்டு மணி சுந்தரத்தைப் பள்ளிக்கு அனுப்பினான்.

சுந்தரம் தனியாக வருவதைக் கண்டதும், “இனிமேல் மணி ஏன் சுந்தரத்தோட வரப் போறான்? அவர் மாமா பெரிய பணக்காரர். மணி வீட்டிலேதான் இருக்கப் போறாராம், ஊரிலேயிருந்து வந்திருக்கிறார்” என்றான் ஒருவன்.

சுந்தரம் திடுக்கிட்டான். மணி மீது குற்றம் சாட்டுவதை அவனால் பொறுக்க முடியவில்லை. நேரே அவனிடம் சென்றான். "சீ! முட்டாள், நீ ரொம்ப கண்டாயோ, அவன் இன்னிக்கு வெளியிலே போறான். அதனாலேதான் வரல்லே, தெரியுமா?" என்று கோபத்தோடு சொன்னான்.

இதற்குள் முதல் மணி அடித்தது. அவரவர் வகுப்பறைக்குச் சென்றனர்.

இரண்டாம் மணி அடிப்பதற்குச் சில விநாடிகள் முன்பு, மணி அவசர அவசரமாக உள்ளே வந்தான்.

மணியா அவன்? அழுக்கு அடைந்த சட்டையும், கிழிந்த பையும், ஓட்டைப் பேனாவுமே அவனுடைய உடைமை என்பது ஊரறிந்த உண்மை.

இப்போது, புத்தம் புது பைலட் பேனா, வழவழவென்றிருந்த சில்க் சட்டையில் ஜம்மென்று வீற்றிருக்க, அருமையான நிக்கர் அழகு செய்ய, உயர்ந்த ஜோடுகள் கால்களைத் தாங்கி நிற்க வகுப்பறைக்குள் நுழைந்தான் மணி. எல்லோருடைய கண்களும் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. சுந்தரம் மணியைப் பார்த்தான். 'தன் கூட வராமல் பிறகு தனியாக வருவது ஏன்?' என்ற வினா திடீரென்று எழுந்தது. தன்னை இகழ்ந்த பையனின் இதழ்க் கடையிலே விரிந்த விஷமச் சிரிப்பு உள்ளத்தைக் குத்தியது.

மணி விடு விடென்று தன் இடத்தில், சுந்தரத்தின் பக்கத்தில் வந்து அமர்ந்தான். சுந்தரத்தின் மனத்தில் பொறாமை என்னும் வித்து முளைவிட ஆரம்பித்து விட்டது.

'ஸைலன்ஸ்' என்ற மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே வகுப்பறைக்குள் நுழைந்தார் உபாத்தியாயர்.

மணி தன் இடத்தில் உட்கார்ந்தவுடன் பரபரவென்று ஒரு காகிதத்தை எடுத்து அதில் எழுத ஆரம்பித்தான். "இன்றைக்கு நான் மாமாவுடன் செல்வதாக இருந்ததால் லீவு வேண்டுமென்று கேட்டேன். ஆனால் அப்பாவுக்கு லீவு கிடைத்துவிட்டதால் அவரே மாமாவை அழைத்துச் செல்வதாகச் சொல்லிவிட்டார். ஆகையால் நான் பள்ளிக்கூடத்திற்கு வந்துவிட்டேன்."

சுந்தரம் இதைப் படித்தான். இருந்தாலும் அவன் மனசு சமாதானப்படவில்லை. பழையபடி ஒட்டுவது சாத்தியமில்லை என்று நினைத்தான். மணியின் சட்டையைப் பார்த்தான். பளபளவென்று மின்னியது. நல்ல உயர்ந்த துணி. தன் சட்டையைப் பார்த்துக் கொண்டான் சுந்தரம். போன வருஷம் வாங்கிய துணி. பஞ்சு துணியாவது சகஜம்; துணி பஞ்சாகும் புதுமையை, அவன் சட்டைக் காலர் எடுத்துக் காட்டியது. சட்டைப் பையெல்லாம் ஒரே மை. காரணம் வருஷம் முழுவதும் ஜலதோஷம் பிடித்திருப்பதே யாகும். ஏழ்மையின் சின்னமாய்த் தான் உட்கார்ந்திருப்பதையும் பக்கத்திலே பணத்தின் பகட்டு ஒளி விட்டுக்கொண்டிருப்பதையும் உணர்ந்தான் சுந்தரம். நேற்று வரையில் மணியும் அப்படியிருந்தவன்தானே என்பதை மறந்தான். நெஞ்சில் பொறாமை புகுந்தால் நேர்மையான எண்ணத்திற்கு ஏது வழி?

அன்று சுந்தரம் கலகலப்பாக இல்லாததை மணி கவனித்தான். சுந்தரமோ மணியின் பட்டுச் சட்டையைக் கண்டு பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான். பள்ளி மணி அடித்தது. மணியும் சுந்தரமும் வீட்டிற்குக் கிளம்பினர். மணி எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தபோது, சுந்தரம் சடக்கென்று மணியின் பட்டுச் சட்டையில் மையைத் தெளித்தான். ஆனால் மணி அதைக் கவனிக்கவில்லை. சிறிது தூரம் சென்றவுடன் சுந்தரம், 'டேய்! யாரோ உன் புதுச் சட்டையின் பின்புறத்தில் மையைத் தெளித்திருக்கிறார்கள்" என்றான்.

மணியோ, "போனால் போகட்டும். அப்படிச் செய்வதிலே ஒரு சிலருக்கு மகிழ்ச்சி" என்றான். சுந்தரத்தின் உள்ளம் குறுகுறுத்தது. மணி பொதுப்படையாகச்

சொன்னதைத் தன்னைத்தான் சொல்வதாக நினைத்தான் சுந்தரம்.

மணி வீட்டுக் கொல்லைப்புறத்துக்கும் சுந்தரத்தின் வீட்டுக் கொல்லைப் புறத்துக்கும் நடுவே சின்னவேலி இருந்தது. ஒரு சின்ன 'கேட்'டும் அமைத்திருந்தார்கள். சுந்தரம் கொல்லைப் புறத்திற்குச் சென்ற போது மணி தன் பட்டுச் சட்டைக்குச் சோப்பு போட்டுக் கொண்டிருந்தான்; சுந்தரம் மையைத் தெளித்ததால் சோப்புப் போட்டுத் தோய்க்க வேண்டியிருந்தது. பிறகு மணி அதை அந்த வேலியிலே உலரப் போட்டு விட்டு உள்ளே போய் விட்டான்.

சுந்தரம் அந்தச் சட்டையைப் பார்த்தான். திடீரென்று ஒரு யோசனை! அந்தச் சட்டையை எடுத்து ஒளித்து வைத்தால் என்ன என்று எண்ணினன். ஆனல் மறு கணமே, "சீ! சீ உயிருக்குயிரான நண்பன் அவன்" என்று நினைத்தான். ஆனல் அவனது பொருமைக் குணம் தீச் செயலைச் செய்யத் தூண்டியது. சுந்தரம் சுற்று முற்றும் பார்த்தான்: ஒருவரும் இல்லை. 'பரக்'கென்று சட்டையை வேலியிலிருந்து உருவி, தன் வீட்டிற்குள் சென்று தன் பெட்டியின் பின் பக்கத்தில் வைத்தான். சட்டையிலே ஈரம் இன்னும் இருந்தது. ஆனல் சுந்தரத்தின் நெஞ்சத்திலே ஈரம் இல்லையே!

மறுநாள் காலை. மணியும் அவன் அப்பாவும் கொல்லைப் புறத்தில் சட்டையைத் தேடிக்கொண்டிருந்தனர். ஆனல் அந்தச் சட்டை அகப்படவேயில்லை. சுந்தரம், 'பட் பட்'டென்ற சத்தம் பக்கத்து வீட்டிருந்து வருவதைக் கேட்டான்.

மறுநாள் பழையபடி கிழிந்த சட்டையுடனும் ஒட்டுப் போட்ட நிஜாருடனும் காட்சியளித்தான் மணி. ஆனல் சுந்தரத்தின் உள்ளத்திலே புதுமை; மாறுதல். அன்பை அகற்றி விட்டுப் பொருமை அந்த இடத்தில் ஆட்சி செலுத்தத் தொடங்கியது. அதன் பயன்!

"சட்டை எங்கேடா மணி?" ஒன்றும் அறியாதவன் போல பரபரப்புடன் கேட்டான் சுந்தரம்.

"புதுச் சட்டையையா கேக்கறே? அது தொலைஞ்சு போயிடுத்து."

மணியின் குரலிலே வருத்தமே இல்லே. மென்மைதான் காணப் பட்டது.

''ச்சு..ச்சு.'' இது சுந்தரத்தின் பரிவு.

அன்றைக்கு மாலே. சுந்தரம் அவசர அவசரமாகப் பள்ளியி லிருந்து திரும்பிவந்தான். சிறிது நேரம் கழித்து காகிதத்தால் மணியி னுடைய பட்டுச் சட்டையைச் சுற்றி எடுத்துக்கொண்டு பக்கத்தி லிருந்த ஆற்றுக்குக் கிளம்பினுன், அப்போது பொருமை விதை வேரூன்றி பெரிய மரமாகிவிட்டது. பொருமையின் விளேவாக அவனது அறிவு மங்கியது. ஆற்றங் கரையில் தென்னே மரங்கள் பேயாக ஆடின: காற்று வீசி வீசி அடித்தது. அந்தச் சட்டையை ஆற்றிலே வீசி யெறிந்து விடவே சுந்தரம் வேகமாகச் சென்ருன். பொருமை யாற்றிலே நற்குணங் கள் அடித்துச் செல்லப்படுவது போல அந்த ஆற்றிலே அந்த அழகிய பட்டுச் சட்டை அடித்துக் கொண்டு செல்லப்படுவதை அகங் குளிரக் காணும் விருப்பத்தின் விளேவே இத்தீய செயல்.

அப்போது....

ஆற்றங்கரையின் ஓரத்திலே ஒரு சிறு பிள்ளேயார் கோயில் உண்டு. அந்தக் கோயிலுக்கு மணி யும் சுந்தரமும் சென்று தினமும் வணங்கி விட்டு வருவார்கள்.

அந்தப் பிள்ளேயார் கோயில் முன்னிலேயில் மணி நின்றுகொண் டிருந்தான். சுந்தரம் ஒரு மரத் தின் பின் பக்கம் மறைந்து நின்று கொண்டான்.

அங்கே மணி....ஆ! இதென்ன அவன் கண்களிலே கண்ணீர்.

''ஆற்றங்கரைப் பிள்ளேயாரே! நேத்திக்குச் சாயங்காலமே இங்கே வந்து 'ஏதாவது நல்ல பொருள் கொடுத்தா எனக்கும் சுந்தரத் துக்கும் சேர்த்துக் கொடுங்கோ, இல்லா விட்டால் எனக்கு மாத் திரம் தனியா எதுவும் வேண் டாம்னு சொன்னேன். நான் மாத் திரம் பட்டுச் சட்டை போட்டுண் டேன்னு சுந்தரத்துக்கு மனசு வேதனேப் படும்னு நான் நினேச் சேன். நான் நினேச்சபடியேதான் ஆச்சு. உங்க செயலாலேதான் இன்னிக்குச் சட்டை காணுமல் போய்விட்டது. இனிமே ஏதாவது கிடைச்சால் எங்க ரெண்டு பேருக் கும் சேர்த்தே கிடைக்கட்டும். எங்க சிநேகம்தான் எனக்கு முக் கியம்'' என்று மணி அழுது கொண்டே பிள்ளேயாரைப் பார்த்து வேண்டிக்கொண் டிருந் தான்.

இதைக் கேட்டான் சுந்தரம். மணியின் உள்ளச் சிறப்பு அவனேத் திக்கு முக்காடச் செய்தது. உட லெல்லாம் வியர்வை ஆருகப் பெரு கியது. மணியின் உயர்ந்த பண்பு அவனேச் சிலிர்க்க வைத்தது.

வெளிச்சம் வந்தவுடன் ஆயிரங் காலத்து இருளும் நீங்குவதுபோல அவன் உள்ளத்திலே இருந்த பொருமைத் தீ மணியின் அன் பென்னும் ஈரத்தால் அணேந்தது.

மறுநாள் காலே. பட்டுச் சட்டை பழைய இடத்திலே இருந்தது.

''மணி....'' பழைய அன்புக் குரல் வெண்கலமாக ஒலித்தது.

மணி பழைய சட்டையைப் போட்டுக்கொண் டிருந்தான். ''என்னடா இது. உன்னுடை புதுச் சட்டை அகப்பட்டு விட்டதாக உன் அம்மா சொன்னுளே. அதைப் போட்டுண்டு வாடா'' என்ருன் சுந்தரம். பொருமையற்ற உள்ள மாக மாறியதன் பலனே இந்தப் பரிவுக் குரல்.

''அது எனக்கு வேண்டாம்'' என்ருன் மணி. குரலிலேயே அந்தச் சட்டையின் மீதுள்ள வெறுப்புத் தெரிந்தது.

''இல்லே. நீ அதைப் போட் டுண்டு வரவேண்டும்'' என்ருன் சுந்தரம். இதைக் கேட்டுக்கொண் டிருந்த மணியின் மாமா விஷய மறிந்து சுந்தரத்துக்கும் புதுச் சட்டை ஒன்று வாங்கிக் கொடுத் தார்.

மணி அந்தச் சட்டையைப் போட்டுக்கொண்டு வந்தான்.

சுந்தரமும் மணியும் புதுச் சட்டை அணிந்து தோளோடு தோள், சேர்ந்து கையோடு கை பிணேத்துச் சென்ருர்கள். வெறும் பிணேப்பா அது? அன்புப் பிணேப்பு அல்லவோ!

யானைக் கதைகள்

காப்டன் சேஷாத்திரிநாதன்

ராமுவை, 'யானைக் குட்டி' என்று வீட்டில் அழைத்தார்கள். சாதாரண பிள்ளைகளைப் பார்க்கும்போது ராமு யானைக் குட்டிதான். நிறமும் யானை நிறம். ஆனால் யானைக்குட்டி ரொம்பவும் பெரிது. ஒன்பது அடி உயரம், மூன்று அடி அகலம்.

யானைக்குட்டி இவ்வளவு பெரிதாயிருந்தும் அதன் வாலும் கண்ணும் சிறியவை. தூணைப் போல் கால்; முறம்போல் காது; பானையைப்போல் பெரிய வயிறு. அப்படியிருந்தும் குட்டியானை அழகுதான்.

குழந்தைக்குப் பல் முளைத்ததென்று தாய் சந்தோஷத்தில் தாலாட்டுப் பாட்டுப் பாடுவாள். 'யானை யானை அழகர் யானை, அழகரும் சொக்கரும் ஏறும் யானை, குட்டி யானைக்குக் கொம்பு முளைத்தது. பட்டினமெல்லாம் பறந்தோடி வந்தது.'

குட்டி யானைக்கு மூக்கு எங்கே? யானைக்குக் கை உண்டா? தும்பிக்கைதான் மூக்கு, அதுதான் கையும். மூக்குதான் இப்படி நீண்டிருக்கிறது. நமது மூக்குக்கு இரண்டு துவாரம் இருப்பதுபோல் யானைத் தும்பிக்கையிலும் இரண்டு துவாரங்கள் இருக்கின்றன. சிலருக்கு மூக்கு நீண்டிருக்கும்; சற்று வளைந்தும் இருக்கும். ஆனால் பிள்ளையாருக்குத்தான் தும்பிக்கை போல் மூக்கு. யானை முகத்தோனல்லவா?

பிள்ளையாருக்கு எப்படி யானை முகம் வந்தது? இதற்கு ஒரு புராணக் கதை இருக்கிறது. கேளுங்கள்! பார்வதி பிள்ளையாரைக் காவலுக்கு வைத்து, தேவி நீராடப் போனாளாம். சிவபெருமான் பார்வதியைத் தேடி வந்தபோது பிள்ளையார் உள்ளே செல்லக் கூடாதென்று மறுத்தாராம். சிவபெருமானுக்கு வந்ததே கோபம்! உடனே தலையை அறுத்துவிட்டாராம். பார்வதி தேவி வந்ததும் ஆறாத் துக்கத்துடன் சிவபெருமானை வேண்டினாள். அவர், ''காட்டுக்குச் சென்று முதல் முதல் யாரைக் கண்டாலும் அந்தத் தலையை அறுத்துக்கொண்டு வந்து பிள்ளையாருக்கு ஒட்டிவிடு'' என்று சொல்ல சிவகணங்கள் சென்று ஒரு யானையைக் கண்டு அதன் தலையைக் கொண்டு வந்து பிள்ளையாருக்கு ஒட்ட வைத்தார்களாம்.

பிள்ளையாரின் தலையைப்பற்றி வேறொரு கதையும் உண்டு. சனீசுவரர் என்றொரு பகவான் இருப்பதைக் கேட்டிருப்பீர்கள். உல

கத்திலே அவர் நல்லது செய்ததே கிடையாது. சனி யாரைப் பார்த்தாலும் அவனுடைய தலை அறுந்து விழுந்துவிடும் என்றொரு சாபம் இருந்தது. பார்வதி தேவிக்குப் பிள்ளையார் பிறந்தார். எல்லோரும் தம் குழந்தையைக் கண்டு மகிழ வேண்டும் என்று பார்வதிக்கு ஆசை. சனீசுவர பகவானும் அழைக்கப்பட்டு வந்தார். தலையை நிமிராமலே ஆசி கூறினார். ''நீங்கள் நிமிர்ந்து பார்த்து ஆசி கூறலாம். என் பிள்ளைக்கு ஒன்றும் நேராது'' என்று பார்வதி கூற, சனி நிமிர்ந்து பார்த்தார். பிள்ளையார் தலை அறுந்து விழுந்தது. பார்வதி ஆறாத் துக்கத்தால் சிவபெருமானை வேண்ட அவர் கணங்களை அனுப்பினார். கணங்கள் யானைத் தலையைக் கொண்டுவந்து பிள்ளையாருக்குப் பொருத்தினார்கள் என்று இந்தக் கதை. இதுதான் உண்மையென்று சிலர் கூறுவார்கள்.

யானையினுடைய தும்பிக்கை தான் அதற்குக் கை என்பார்கள். இது சரியல்ல. நாம் கையால் செய்யும் அநேகக் காரியங்களை யானை தும்பிக்கையால் செய்துவிடும் என்பார்கள். இதில் ஓரளவு உண்மை உண்டு. தும்பிக்கையாலே தரையிலிருக்கும் ஊசியை எடுக்குமாம். இது தவறு.

மிருகக்காட்சிச் சாலைக்கு, அதாவது 'ஜூ'வுக்குப் போனால் குட்டி யானையைப் பார்க்கலாம். அதன் கிட்டே போனால் தும்பிக்கையை வளைத்து நீட்டும். பயப்படக் கூடாது. உன்னை ஒன்றும் செய்யாது. இவ்வளவு பெரிய பிராணி இப்படிச் சாதுவாயிருப்பது ஆச்சரியமல்லவா! அதன் தும்பிக்கை முனையில் ஒரு காலணாவை வைத்தால் அதைப் பாகனிடம் கொண்டு கொடுக்கும். ஆனால் வாழைப்பழத்தையாவது தேங்காயாவது கொடுத்தால் தன் வாய்க்குள்ளே போட்டுக் கொள்ளும். பழத்தை விழுங்கி விடும். தேங்காயை உடைத்துத் தின்றுவிடும்.

யானைப்பாகன் சாதம் உருட்டிக் கொடுப்பான். ஒவ்வொரு கவளமும் பானையளவு பருமனாயிருக்கும். அதைத் தும்பிக்கையால் வளைத்துச் சுருட்டி வாய்க்குள்ளே போட்டுக்கொள்ளும்.

யானை தண்ணீர் குடிப்பதைப் பார்க்கவேண்டும். தும்பிக்கையாலே ஜலத்தை உறிஞ்சி எடுத்துக் கொள்ளும். உனக்கு மூக்கிலே ஜலத்தை உறிஞ்சிக் கொள்ள முடியுமா? புறையேறி மூச்சுத் திணறல் ஏற்படும். யானைக்கு மூக்கிலே ஓர் அடைப்புக் கதவு இருக்கிறது. தும்பிக்கையிலிருந்து தண்ணீர் தொண்டைக்குச் செல்லமுடியாது. தண்ணீரைத் தும்பிக்கையில் எடுத்து வாய்க்குள்ளே விட்டுக்கொள்ளும்.

யானை குளிக்கும்போதும் இப்படித்தான். நாம் செம்பை எடுத்துத் தண்ணீர் மொண்டு தலைமேல் ஊற்றிக்கொள்வது போல் யானை தும்பிக்கை நிறைய தண்ணீரை எடுத்து முதுகிலும் தலையிலும் வாரி விட்டுக்கொள்ளும்.

யானை நடக்கிறதே ஓரழகு. தொந்தியும் தொப்பையுமாய்ச் சிலர் நடப்பது யானை நடப்பது போலிருக்கும். ஆனால் யானை நடப்பதுபோல் வேகமாயும் அழகாயும் இருக்காது. யானைக்கு யானைப் பாகன் ஒரு மணியை வயிற்றைச் சுற்றித் தொங்க விடுவான். 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்று மெதுவாய்த் தாளம் போடுவது போல் மணி ஓசை கேட்கும். மணியோசையில்லாத போனால் யானை வருவதை நாம் அறியாமல் யானையால் மிதிக்கப்படுவோம்.

யானைக்குக் கரும்பு ரொம்பப் பிரியம். பொங்கல் விடுமுறை நாட்களில் ஜூவுக்குப் போகும்போது கரும்புத் துண்டுகளைக் கொண்டு போய் யானைக்குக் கொடுக்க வேண்டும். முழுக் கரும்பும் கொடுக்கலாம். ஒரு நிமிஷத்தில் கடித்துத் தின்றுவிடும்.

யானை ரொம்பப் புத்திசாலி என்று சொல்லுவார்கள். நல்ல ஞாபகமும் உண்டாம். 'தையல்காரனும் யானையும்' என்ற கதை கேட்டிருப்பீர்கள். அவன் கடைக்குத் தினமும் ஒரு யானை வருமாம்.

ஏதாவது தின்னக் கொடுப்பானாம். வழக்கம்போல் யானை கடை வாசலில் வந்து நிற்கவே ஊசியைக் கொண்டு தும்பிக்கையைக் குத்தினானாம், குறும்புக்காக! அடாதது செய்தால் படாதது படுவான் என்பதுபோல் அவனுக்குத் தண்டனை கிடைத்தது. தும்பிக்கை நிறைய சேற்றையும் தண்ணீரையுமாய் எடுத்துக்கொண்டு போய் அவன் மூஞ்சியிலும் தைக்கும் புதுத் துணிகள் மீதும் கொட்டியதாம்.

யானை ரொம்பச் சாதுவான பிராணிதான். ஆனால் அதற்குக் கோபம் வந்தால் அது செய்யும் நாச வேலைக்கு ஈடில்லை. ஒரு சிறுவன் ஒரு யானைக்குக் கற்கண்டு கொடுப்பது வழக்கம். ஒரு நாள் கற்கண்டு கொடுப்பதுபோல் பாவனை செய்து ஏமாற்றி. அடுத்திருந்த யானைக்குக் கொடுத்தான். யானைக்குக் கோபம் வந்து, சிறுவனைத் தும்பிக்கையால் இழுத்துத் துணியைக் கிழித்து அடித்துக் கொல்லப் போயிற்று. நல்ல வேளை, யானைப் பாகன் யானையை அடக்கிச் சிறுவனைக் காப்பாற்றினான்.

இவ்வளவு ஆத்திரமும் கோபமும், வலிமையும் உடைய யானை ரொம்பச்சாந்தமாயும்கருணையுடையதாயும் இருக்கும். யானைப்பாகன் தன் குழந்தையை யானையிடம் பார்த்துக் கொள்ளும்படி சொன்னால் அது விசுவாசமாய்ப் பார்த்துக்கொள்ளும். வெயிலாக இருந்தால் குழந்தையை நிழலுக்கு மெதுவாய்த் தூக்கி செல்லுமாம்.

யானைக்குச் சங்கீத ஞானம் உண்டாம். வாத்தியம் வாசிக்கும்போது தாளத்திற்கேற்ப, தும்பிக்கையை ஆட்டிக் கேட்குமாம். வாத்தியம் வாசித்த ஒருவனை அருகில் வந்து தும்பிக்கையால் தழுவி நன்றியைக் காட்டியதாம்.

கீழேவரும் கதை முழுப் பொய். ஆனால், ரொம்பவும் ருசியுள்ளது. யானைக்கு இவ்வளவு பெரிய மண்டையும், அதனுள்ளே பெரிய மூளை இருந்தும் யானை கொஞ்சம் அசடுதான். கோடையின் கொடுமையால் சில யானைகள் அலைந்து திரிந்து ஒரு குளத்தைக் கண்டு தண்ணீர் குடிக்க வந்தன. சாயங்காலமாகையால் பொந்துக்குள்ளே பதுங்கியிருந்த முயல்கள் மிதிக்கப்பட்டு இறந்தன. "என்னடா செய்வது?" என்று முயல்களெல்லாம் துயரத்தால் வாடியபோது ஒரு புத்திசாலி முயல், "இந்த யானைகளை இங்கே வராதபடி விரட்டி விடுகிறேன்" என்றது. யானையரசனிடம் தூது சென்று சொல்லிற்று: "அரசனே! நாங்கள் சந்திரகுலத்தைச் சேர்ந்தவர்கள். (சந்திரனுள்ளே முயல் உட்கார்ந்திருப்பதுபோல் தோன்று



பூவும் அழகும்

போட்டோ: புஷ்பத்துறை சுப்ரமண்யம்

கிறதல்லவா?) நீங்கள் எங்களை மிதித்துக் கொல்வதைக் கண்டு சந்திரன் ரொம்பவும் கோபம் கொண்டு விட்டார். குளத்துக்கு வாருங்கள்: காட்டுகிறேன்'' என்று அழைத்துச் சென்றது. குளத்தில் சந்திரனுடைய பிம்பம் தெரிந்தது. குளத்தில் யானையரசன் இறங்கவே தண்ணீரில் தோன்றிய சந்திரன் ஆடத் தொடங்கியது. அதைக் கண்ட யானையரசன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு திரும்பிச் சென்றது. அதுமுதல் யானைகள் குளத்துக்கு வரவில்லை. முயல்களெல்லாம் சுகமாக வாழ்ந்தன.

பஞ்சதந்திரக் கதைகளில் யானையைப் பற்றி ஒரு கதை உண்டு. ஒரு மரத்தில் குருவி கூடு கட்டி முட்டையிட்டு வாழ்ந்ததாம். மதம் பிடித்த யானையொன்று அங்கே வந்தது. மதம் பிடித்த யானை ரொம்ப நாசவேலை செய்யும். மரத்தின் கிளையை இழுத்து ஒடித்துத் தள்ளியது. குருவிக் கூடு கலைந்து முட்டை கீழே விழுந்து உடைந்தது. குருவிக்கு ரொம்பத் துக்கம். குருவிக்கு நண்பன் மரங்கொத்திப் பறவையொன்று இருந்தது. மரங்கொத்தி, ''ஏன் துக்கமாயிருக்கிறாய்?'' என்று கேட்க, குருவி யானையின் நாசவேலையைச் சொல்லிற்று. இரண்டுமாய் யானையைக் கொல்லவேண்டுமென்று நிச்சயித்தன. ''என் நண்பன் கொசுவைக் கூப்பிடுகிறேன்'' என்று மரங்கொத்தி சொல்லியது.

''கொசுவே, கொசுவே, என் சிநேகிதி குருவியுடைய முட்டையையெல்லாம் யானை உடைத்தது, யானையைக் கொல்லவேண்டும்'' என்றது.

கொசு, ''நானுச்சு, வருகிறேன்'' என்றது. கொசு தவளையையும் அழைத்துவந்தது. ''நாம் மூன்று பேரும் சேர்ந்தால் யானை பிழைக்குமா?'' என்று சொல்லிக்கொண்டன.

கொசு யானையின் காதில் பாடியது. மரங்கொத்தி யானையுடைய கண்களைக் கொத்தியது. யானை வேதனை பொறுக்க முடியாமல் அலைய, கிணற்றிலிருந்து தவளை கத்தியதைக் கேட்டு, தண்ணீரைத் தேடி வந்த யானை கண் தெரியாமல் கிணற்றில் விழுந்தது, குருவிக்கு ரொம்பச் சந்தோஷம்.

மனிதனுக்கு யானையைப்போல் ஞாபகம் வேண்டும். தலைவருக்குப் பணிந்து ஒத்துழைக்கும் குணமும் வேண்டும். வலுவில் சண்டைக்குப் போகவும் கூடாது. வந்த சண்டையில் ஜயிக்கவும் வேண்டும். மனிதனுடைய குணங்களை ஆக்கியிருப்பதெல்லாம் பிராணிகளுடைய குணங்களிலிருந்தாகும்.

நாளைக்குச் செய்யவேண்டிய வேலையை இன்றே செய்துவிடு. மா[illegible]யில் செய்ய வேண்டியதைக் காலையிலேயே செய்துவிடு.

—மகாபாரதம்.

புலி வருதுடோய்!

எஸ். ரங்கநாயகி

[பாச்சு, விச்சு: சகோதரர்கள். மற்றும், அவர்கள் அம்மா, அப்பா; கறிகாய்க்காரன், புட்டி வாங்குபவன்.]

[வாசலில் கறிகாய்க்காரி கூப்பிடுகிறாள்]

அம்மா: டேய் விச்சு, வாசல்லே யாருடா கூப்பிடறு?

விச்சு: அப்பப்பா, நல்ல தொந்தரவா போச்சு. கொஞ்ச நேரம் இந்த லீவு நாளிலாவது விளையாடலாமென்றால் இவர்கள் விளையாட விடமாட்டார்கள். அடே பாச்சு, இதற்கு முதல்லே ஏதாவது வழி செய்யணும்.

பாச்சு: எதற்குடா?

விச்: அதாண்டா, நிம்மதியா விளையாடறதுக்கு. வாசல்லே வருபவர்களை முதல்லே துரத்த வழி செய்யணும். அவர்கள் வருவதால் தானே, அம்மா 'இது யாருடா, அது யாருடா'ன்னு தொந்தரவு செய்யறு!

பாச்: ஆமாண்டா; இதற்கு ஏதாவது ஒரு வழி செய்யணும்டா. இரு; நான் ஏதாவது உபாயம் சொல்றேன்..ஆங், இப்ப ஒரு உபாயம் உதயமாச்சு. (காதோடு சொல்கிறான்)

விக்: ஓ, வெரிகுட் ஐடியாதான்.

அம்: (மீண்டும் உள்ளிருந்தபடியே) டேய் பாச்சு, கறிகாய்க்காரி போலிருக்கேடா! என்னென்ன கறிகாய் வெச்சிண்டிருக்கா, என்ன விலை? எல்லாம் கேளு.

பாச்: சரிம்மா; ஏ கூடைக்காரி, என்ன கறிகாய் வெச்சிண்டிருக்கே? என்ன விலை? எல்லாம் சொல்லு.

கறிகாய்க்காரி: வெண்டைக்காய் வீசை பத்தணு; கத்திரிக்காய் வீசை 11 அணு; உருளை..

விச்: ஏய் ஏய், ஹோல்டான். உன் பாட்டை அதோடு நிறுத்திக்க. நீ இப்போ எந்த ஊரிலே இருக்கே, தெரியுமா?

பாச்: நீ இப்ப இருப்பது பாரத தேசமாக்கும்! ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கெல்லாம் மாறிப் போன பிறகு இன்னும் நீ எட்டணு, பத்தணு என்று அணுக் கணக்கிலே சொல்றியே!

கறி. காரி: அட, நமக்கு அதெல்லாம் வேண்டாம் சாமி. நயா பைசாவோ, நஹி பைசாவோ, என்னென்னமோ சொல்லிக்கிறுங்க. இந்த வம்பு தும்பெல்லாம் வேண்டாம். உங்களைப்போல் பள்ளியிலே படிக்கப் போறோமா, இதையெல்லாம் தெரிஞ்சுக்க?

விச்: அட ராமா, ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்னன்னு சொல்லுவே போலிருக்கே! எப்போ நாம்ப இந்தப் பாரத தேசத்துப் பிரஜைகளாயிட்டோமோ, அப்போ சர்க்கார் சொல்றபடி கேட்டுத்தான் ஆகணும்.

கறி. காரி: அட! நீ சும்மா இரு சாமி, சர்க்கார் சொல்றதை நான் கேக்கறது கிடக்கட்டும். நான் சொல்றதை அம்மா கேட்டுப்பாங்க. நீ அம்மாவைக் கூப்பிடு தம்பி, அம்மா அணுக் கணக்கிலே தருவாங்க. ஓ அம்மா..அம்மா.

பாச்: ஏய் ஏய், சும்மா ஏன் கத்தறே? அம்மாவைக் கூப்பிட்டால் உனக்குத்தான் கஷ்டம். இப்பவே சொல்லிட்டேன்.

விச்: ஆமாம், அம்மாவைக் கூப்பிட்டா கடைசியிலே வீடு போக வழி தெரியாமெ திண்டாடுவே.

கறி. காரி: ஐயையோ, ஏஞ்சாமி அப்படி?

பாச்: நம்ப ஐயரு என்ன பண்ணிட்டாரு தெரியுமா? கையிலிருந்த பணத்தை அப்படியே பாங்குக்கு எடுத்துப் போய் எல்லாவற்றையும் நயா பைசாவா மாற்றிக் கொண்டு வந்து விட்டாரு.

''டேய், பாவம்! நம்ப வெங்கிட்டு வாயிலே ஒருநாளும் பொய்யே வருவது இல்லேடா!''

''ஆமாம். அதிலென்ன சந்தேகம்? அவன் எப்போதும் மூக்கால்தானே பேசுகிருன்!''

—வே. ராமன், திருநெல்வேலி.

அதனுலே அம்மா கையிலே அணுவே கிடையாது.

கறி. காரி: அட ராமா, நிஜம் தானு, தம்பி?

விச்: அட, நிஜமில்லாமெ பொய்யா சொல்லுவோம்? அது மட்டுமில்லே. நீ இப்ப நயா பைசா வாங்கிக்கலேன்னு, உன்னே உட்கார வைத்து அந்த வாய்ப்பாடெல்லாம் சொல்லிக் கொடுக்கப் போருஅம்மா.

கறி. காரி: ஐயையோ, வேண்டாம் சாமி, எனக்கு.

பாச்: நீ வேண்டாம்னு விட்டு விடுவார்களா? அம்மா சொல்றதைக் கேட்டுட்டுச் சும்மா தலையை ஆட்டிக் கொடுத்தால் கூட போதாது. உன்னேத் திருப்பி ஒப்பிக்கச் சொல்லிவிட்டு, நீ சரியாகச் சொல்லாட்டா மறுபடியும் சொல்லிக் கொடுக்கப் போகிருள். இல்லேயடா விச்சு.

விச்: நம்ப ஏண்டா பொய் சொல்லப் போருேம்!

கறி. காரி: ஐயா சாமி, எனக்கு இதெல்லாம் வேண்டாம். நான் இதோ ஓடியே போயிடறேன் (ஓடி விடுகிருள்.)

பாச்: அப்பாடி, தொலேந்தாள். டேய் விச்சு, நம்ப பிளான் நல்ல பலன்தான்! வாடா விளேயாடலாம்.

விச்: டேய் பாச்சு, பம்பரம் விளேயாடினது போதும். இப்போ கோலி விளேயாடலாண்டா.

[வாசலில் புட்டி வாங்குபவன் வருகிருன்.]

புட்டிக்காரன்: அம்மா!

பாச்: சரியாப் போச்சு, நீ வந்து சேர்ந்தாயா?

புட்டி: அட, உனக்கேன் கஷ்டம் சாமி, அம்மாவைக் கூப்பிடு.

பாச்: (மனத்திற்குள்) ஆமா, அம்மா வந்து பேரம் செய்வதோடு நின்றுவிடுவாளா? எங்களேத்தான் அந்தப் புட்டியை எடுத்துண்டு வாடா, இந்த டப்பியை எடுத்துண்டு வாடாம்பா. இவனேயும் எப்படியாவது விரட்டிவிடணும். (புட்டிக்காரனிடம்) ஏய், அம்மாவைக் கூப்பிட்டால் உனக்குத்தான் நஷ்டம்.

புட்டி: அதுதான் வழக்கமாச்சே, ஒரு தகரக் குவளேயை நீட்டிப்பிட்டு அம்மா இரண்டணு கேப்பாங்களே!

விச்: சரிதாண்டா, யோக்கியன் மாதிரி நீ சும்மா அளக்காதே.. நாங்க அந்த அணு நஷ்டத்தைச் சொல்லலே. உனக்கு நேரம் நஷ்டமாகும்னு சொன்னேம். அதாவது அம்மா இன்றிலிருந்து நயா பைசாக் கணக்குதான்னு , தீர்மானிச்சுட்டாங்க. அதனுலே உன்னே உட்கார வெச்சுப் பாடம் சொல்லித் தரப் போருங்க.

புட்டி: அட, அந்தப் பாடம் எனக்குத் தெரியும் சாமி. காலணுவிற்கு 2 நயா பைசா, அரையணுவிற்கு 3 நயா பைசா, முக்காலணுவிற்கு 5 நயா பைசா, ஒரணுவிற்கு..

பாச்: அட கடவுளே, இதெல்லாம் தெரிஞ்சுண்டாச்சா? டே விச்சு, நம்ப உபாயம் இவங்கிட்ட அபாயமாகத்தான் இருக்கும் போலிருக்கு.

விச்: அட, அதுக்குள்ளே தைரியத்தை இழந்துவிடாதேடா..ஏ, புட்டிக்காரா, இரண்டணாவிற்கு எவ்வளவு பைசா?

புட்டி: இதென்ன கேள்வி? இரண்டணாவிற்கு 12 நயா பைசா.

விச்: மூன்றணாவிற்கு?

புட்டி: மூன்றணா சமாசாரம் நமக்குத் தெரியவேண்டாம் தம்பி. புட்டி போடறவங்க காலணா புட்டி அரையணா புட்டியாகத்தான் போடுவாங்க. அதிகமாப் போச்சுன்னா இரண்டணாவிற்கு மேலே போகாது.

விச்: கிடக்கட்டும், நீ சும்மா சொல்லு. மூன்றணாவிற்கு எவ்வளவு நயே பைசே.

புட்டி: ஓரணாவிற்கு 6 நயா பைசா, இரண்டணாவிற்கு 12 நயா பைசான்னா மூன்றணாவிற்கு 18 நயா பைசா.

விச்: ஏய் இதென்ன, பகல் கொள்ளைன்னு நினைச்சியா?

புட்டி: என்ன தம்பீ, இல்லாத வார்த்தையெல்லாம் பேசறே?

பாச்: இல்லாத வார்த்தையை நாங்க பேசலே, நீதான் பேசறே. மூன்று அணாவிற்கு 19 நயே பைசே.

புட்டி: ஐயையோ, நிஜமாகவா? அப்பன்னா ஒரு பைசா அதிகமாப் போவுதே.

பாச்: ஆமாம், அதிகம்தான். இன்று உங்கிட்டே போடறதுக்கு அம்மா பெரிய பெரிய டப்பிகளாக எடுத்து வெச்சிருக்காங்க. எல்லாம் மூன்றணா விலை போகும் டப்பிகள். அதனாலே ஒவ்வொரு டப்பிக்கும் 19 நயே பைசேவாகக் கொடுத்தால்தான் வாங்கிப்பாங்க. மூன்றணாவாகக் கொடுத்தால் வாங்கிக்கொள்ள மாட்டோம். தெரியுமா?



புட்டி: ஐயையோ, நிஜமாகவா தம்பி? அப்பன்னு நான் வேறு எங்காவதுபோய் அரையணு, ஒரணு டப்பி வாங்கிக்கறேன். (போய்விடு கிறுன்)

பாச்: அம்மாடி, இவனும் போனுன். இன்னும் ஒரு வாரத்திற்கு எட்டிப் பார்க்கமாட்டான்! வாடா விளையாடலாம்.

அம்: (வாசலில் வந்தபடி) ஏண்டா, கறிகாய்க்காரி எங்கேடா? இன்னும் யாருடைய குரலோகூட கேட்டதே?

விச்: கறிகாய்க்காரிகிட்டே கறிகாயெல்லாம் நன்னுயில்லேம்மா. அதனுல் அவளைப் போகச் சொல்லிட்டோம்.

அம்: சரி, இப்ப நீங்க ரெண்டு பேரும் உள்ளே வந்து எனக்குக் கொஞ்சம் கூடமாட உதவி செய்யணும். முதல்லே வேலைக்காரி தேய்த்து வெச்சிருக்கும் ஏனங்களை அலம்பிக் கொண்டு வாருங்கள்.

பாச்: சரியாப் போச்சு, பெண்கள் செய்யற வேலைகளையெல்லாம் எங்களைச் செய்யச் சொல்றியே?

அம்: சின்னப் பெண்கள் இல்லாத வீட்டில் நீங்கதானேடா எனக்கு உதவியாக இருக்கணும்? எனக்கு ஒரே தலைவலியாக இருக்கு.

பாச்: சரிம்மா, ஏனங்களை அலம்பி வைக்கிறேம். ஆனுல்..

அம்: இந்தாடா, இந்த ஆனுல் கீனுல் கண்டிஷனெல்லாம் போடாதீங்கோ. சொல்ற வேலையைச் செய்யணும். உங்களுக்கும் பொழுதுபோக்காக இருக்கும். அந்த அலமாரியிலே இருக்கிற சாமானெல்லாம் எடுத்துட்டு, அலமாரித் தட்டுக்குப் புதுப் பேப்பர் போட்டு ஒழுங்கா சாமான்களை அடுக்கி வெச்சுடுங்கோ. வீடு பூரா ஒரே ஒட்டடையா இருக்கு. ஒட்டடைக் கொம்பாலே ஒருத்தன் ஒட்டடை அடிச்சுட்டு, இன்னொருத்தன் கதவு ஜன்னல்களைத் துணியால் நன்ருகத் துடையுங்கள்.

விச்: (பாச்சுவின் காதோடு) டேய் பாச்சு, இப்ப இந்த அம்மா கிட்டேந்து எப்படியாவது தப்பிச்சுக்கணும்டா. வேலை சொல்வதோடு நிற்காமல், பக்கத்திலிருந்து மேல்பார்வையும் பார்க்க ஆரம்பிச்சுடுவா.. நயா பைசா விவகாரத்தை இங்கும் கொஞ்சம் செலுத்திப் பார்க்கணும்!

பாச்: அம்மா, வேலையெல்லாம் செய்யறதுக்குச் சந்தோஷம்தான். ஆனுல் நீ கிட்டேயிருந்து மேற்பார்வையிட முடியாதே என்று தான் பார்க்கிறேம்.

அம்: ஏன், நான் எங்கே போயிடப் போறேனும்? இங்கேயேதான் இருப்பேன்.

பிச்: நீ எங்கேயும் போக மாட்டே. ஆனுல் எங்களைப் பார்க்க முடியாது. மேலத்தெரு தாத்தா இப்போ நம்மாத்துக்கு வறேன்னு சொல்லியிருக்கிறுர்.

அம்: ஐயையோ! அந்த வம்புக்காரக் கிழவரா? ஊர் விவகாரமெல்லாம் தன் தலைமேல் போட்டுக் கொண்டு சுற்றுவாரே, அவரா?

பாச்: ஆமாம், அவரேதான். 'இந்தப் பெண்களெல்லாம் நயா பைசாக் கணக்குக் கற்றுக்கொள்ளத் தயங்குவதால்தான், வாசலில் வரும் விற்பனையாளர்களும் கஷ்டப்படுகிறுர்கள். முதலில் நான் போய் எல்லாப் பெண்களுக்கும் கற்றுக் கொடுக்கப் போகிறேன்' என்று ஆரம்பித்திருக்கிறுர். முதன் முதலாக உனக்குச் சொல்லிக் கொடுக்க இப்பொழுது வரப்போவதாகச் சொன்னுர்.

அம்: அச்சச்சோ, அவர் இங்கேயா வரப்போகிறுர்? அடே பாச்சு, விச்சு நீங்க வேலை செய்யாட்டா போறது. இரண்டு பேரும் வாசலிலேயே நின்றுகொண்டு அவர் வந்தால் 'அம்மா வீட்டில் இல்லை' என்று சொல்லி அனுப்பி விடுங்கள். நான் உள்ளே போகிறேன். (போய் விடுகிறுள்)

பாச்: (சிரித்துக் கொண்டே) நயா பைசா வாழ்க.. அட, அதோ அப்பா ஆபீஸிலிருந்து இன்று சீக்கிரமாகவே வந்து விட்டாரே! என்ன விஷயமோ தெரியலை.

விச்: சரியாப் போச்சு, அப்பா வந்து விட்டாலும் நம்மை விளையாட விடமாட்டார்டா. அப்பா விடமும் ஏதாவது ஒரு விதமாக நயா பைசாப் புலியைக் காட்டலாமா?

24807

அப்: (வந்துக்கொண்டே) ஏ பாச்சு, விச்சு, இங்கே என்னடா செய்கிறீர்கள்?

பாச்: ஒன்றுமில்லேப்பா, நயா பைசாக் கணக்கு; வாய்பாடு..

அப்: நயா பைசா வாய்பாடு படிக்கிறீர்களா?

விச்: ஆமாம்பா.

அப்: ஏய் பசங்களா, நயா பைசா வாய்பாடு படித்தால் மட்டும் போருது. கணக்குப்போட்டுப் பழகணும்.

பாச்: சரிப்பா.

அப்: நீங்களாக ஒழுங்கா உட்கார்ந்து கணக்குப் போட மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். அதுக்காகத்தான் என் சிநேகிதன் ராமசந்திரனை வரச் சொல்லியிருக்கிறேன்.

விச்: ஐயோ, ஏதுக்கு அப்பா?

அப்: அவன் நேற்றுக் கடையிலே ஏதோ நிறைய சாமான் வாங்கினும். கடை பில்லில் எல்லாம் நயா பைசாக் கணக்காகப் போட்டு, நயா பைசாவாக மீதிச் சில்லறையும் கொடுத்தானும். அதைச் சரி பார்க்க ராமசந்திரனுக்கு ஒழியவில்லே. என்னிடம் அதைப் போட்டுப் பார்க்கிருயா என்று கேட்டான். எனக்கு அதைப் பார்த்தால் ஒரே தலே சுற்றலாக வரும். அதனல் வீட்டிற்கு எடுத்து வந்து உங்களிடம் கொடுக்கும்படியாகச் சொல்லியிருக்கிறேன்.

பாச்: ஐயையோ, நயா பைசாக் கணக்கா? வேண்டாமே!

அப்: வேண்டாம் என்னடா, வேண்டாம்? இந்த மாதிரிக் கணக்குப் போட்டுப் பழகினுல்தான், ஸ்கூல் திறந்ததும் நயா பைசாக் கணக்குப் போட சரியாக வரும்.. அதோ, ராமசந்திரன்கூட வந்து விட்டான்.

விச், ஐயையோ, எல்லோரிடமும் புலி வருது, புலி வருதுன்னு சொல்லி, கடைசியிலே நம்பகிட்டேயே நிஜப் புலி வந்துடுத்தே.. டேய் பாச்சு, உள்ளே ஓடியா. ஒட்டடை அடிக்கப் போயிடலாம்!

சரியான உபதேசம்

பவானி

கந்தசாமிச் செட்டியார் வீட்டில் அரைமணி நேரமாகச் சத்தியாக்கிரகம் செய்தான் பிச்சைக்கார ஆண்டியப்பன். ஆனால் அவர்தான் பெயர்போன கருமியாயிற்றே; அவரிடமா செல்லும் அவனுடைய சாமர்த்தியமெல்லாம்? கடைசியில் நொந்த மனத்துடன் திரும்பினான் ஆண்டி.

வழக்கம்போல அன்றும் ஏமாற்றத்துடனேயே தனது சொந்த இடமான சத்திரத்தின் அருகே சென்று துணியை விரித்தான் அவன். இடுப்பில் செருகி இருந்த ஓர் அழுக்கடைந்த பையை உருவி அதிலிருந்து நான்கு ஐந்து செப்புக் காசுகளை எடுத்துத் தன் கிழிந்த துணியில் போட்டுக் கொண்டு போவோர் வருவோரிடமில்லாம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான்.

இந்த உலகில் பலர் பலவிதமாகப் புகழ் அடைகிறார்கள். இன்னும் சிலர் தம் எழுத்துத் திறனால் புகழ் அடைகிறார்கள். இன்னும் சிலர் தம் வாக்குத் திறனால் புகழ் அடைகிறார்கள். ஆனால் நம் கந்தசாமிச் செட்டியாரோ தம் கருமிதனத்தால் பிரசித்தி பெற்றவர். அவர் கையிலிருந்து ஒரு செப்பால் அடித்த காசுகூட லகுவில் பெயராது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஆனால் ஆண்டியப்பனோ அவரிடம் தினமும் மன்றாடுவான், அவரிடமிருந்து ஏதாவது பிச்சை பெறவேண்டும் என்று. பாவம்! அவனால் பெறத்தான் முடியவில்லை கரடியாகக் கத்தினபோதும்.

ஆண்டியப்பனுக்குப் பிச்சை எடுப்பதே தொழில் என்றாலும் அவன் குருடனோ அல்லது நொண்டியோ இல்லை. அதிலும் அவன் ஒரு திட்டம் போட்டு அதன்படிதான் நடந்துகொண்டிருந்தான். காலையிலும் மாலையிலும் ஊரில் பிச்சை எடுத்து அதில் கிடைப்பதைக் கொண்டு நன்றாகத் தின்றுவிட்டு இரவில் தூங்குவதுதான் அவன் ஏற்படுத்திக்கொண்ட திட்டம்.

இவ்வாறு ஒரு நாள் அவன் இரவில் தூங்குகையில் அதிசயமான கனவு ஒன்று கண்டான். அதில் கந்தசாமிச் செட்டியார் திடீரென்று மனம் மாறி ஆண்டியப்பனுக்கு இரண்டணா கொடுக்கிறார். அதன்படி அதைக் கொண்டு அவன் அதிருஷ்டப் பிரைசில் சீட்டுப் போடுகிறான். அதில் அவனுக்கு யார் செய்த புண்ணியத்தாலோ ஆயிரம் ரூபாய்ப் பரிசு அவனுக்கு விழுகிறது.

தான் காணும் கனவுகள் அப்படியே நடக்கிறது என்பதில் அவனுக்கு மிகவும் அபார நம்பிக்கை. எப்படியாவது கந்தசாமிச் செட்டியாரிடம் இரண்டணா காசு வாங்கிப் பரீட்சை செய்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தவனாக, செட்டியார் வீட்டில் தினமும் அரைமணி நேரமாவது நின்று கெஞ்சுவான். ஆனால் பாவம்! செட்டியார் கொஞ்சம்கூட மசியவில்லை.

ஒரு நாள் மாலை செட்டியார் கோவில் மண்டபத்தில் நடந்துகொண்டிருந்த பிரசங்கத்தில் கலந்து கொண்டிருந்தார்.

ஆண்டியப்பனும் அங்கே தன் தொழிலை நடத்திக்கொண்டிருந்தான்.

அன்று 'ஔவையும் அவளது நீதிகளும்' என்பதைப் பற்றிப் பிரசங்கம் நடந்துகொண்டிருந்தது. அதில் 'ஐயமிட்டு உண்' என்ற வார்த்தை செட்டியாரை மிகவும் கவர்ந்தது. அதிலிருந்தே தன் கருமித்தனத்தை ஒழித்துக்கட்ட உறுதி கொண்டார்.

ஆனால் அதே சமயத்தில் 'ஏற்பது இகழ்ச்சி' என்ற சொல் ஆண்டியப்பனின் மனத்தில் தைத்தது. இனிமேல் கை நீட்டிப் பிச்சையே வாங்குவதில்லை என்ற முடிவுக்கு வந்தான்.

மறுநாள் காலை ஆண்டியப்பன் செட்டியார் வீட்டைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தான். அப்போது செட்டியார் அவனைப் பலவந்தமாகக் கூப்பிட்டு இரண்டணாக் காசை நீட்டினார்.

என்றுமில்லாத செட்டியாரின் இந்தச் செய்கை ஆண்டியப்பனை வியப்புக் கடலில் ஆழ்த்தியது; என்றாலும் அவன் 'ஏற்பது இகழ்ச்சி' என்று சொல்லிக்கொண்டே அதைக் கண்டிப்பாக வாங்க மறுத்துவிட்டான். ஆனால் செட்டியார் விடவே இல்லை. அவனைக் கண்டிப்பாக வாங்கிக் கொள்ள வேண்டும் என்று மிகவும் பலவந்தம் செய்தார். ஆண்டியப்பனும் 'முடியவே முடியாது' என்று பிடிவாதம் செய்தான்.

இந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் அவர்களிடம் சென்று சமாசாரம் என்ன என்பதை விசாரித்தார்.

செட்டியார், ''ஔவையார் 'ஐயமிட்டு உண்' என்று சொல்லியிருக்கிறார். அதன்படி போனால் போகிறது என்று பிச்சை போட்டால் இவன் வாங்கவே மாட்டேன் என்கிறான்'' என்று புகார் செய்தார்.

ஆண்டியப்பனும் தன் கட்சியை எடுத்துக் கூறினான்.

அதைக் கேட்ட அந்தப் புது மனிதர், ''ஐயா! இது என்ன ஆச்சரியம்! நீங்கள் இருவருமே தவறு செய்துவிட்டீர்கள். அதே ஔவையார் 'தையல் சொல் கேளேல்' என்று கூறியிருக்கிறாள் அல்லவா? தையல் என்றால் பெண். ஔவையாரும் பெண்தானே? அவள் சொல்வதைக் கேட்டு நீங்கள் இருவரும் சண்டை போட்டுக்கொள்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது' என்றார்.

இதை கேட்ட செட்டியார் திடீரென்று நீட்டிய காசைக் கொடுக்க மறுத்து உள்ளே போய்விட்டார்.

ஆண்டியப்பனோ அதே வீட்டில், ''ஐயா, அம்மா!'' என்று பிச்சை எடுக்கத் தொடங்கினான்.

தென்றல்

வசந்த காலம் வந்திடும்
வண்ணப் பூக்கள் மலர்ந்திடும்;
அசைந்து வருவாய் தென்றலே!
அடடா, இன்பம் எத்தனை!

மெல்ல இழைந்து வீசுவாய்
மேனி எங்கும் குதூகலம்!
புல்லும் பூண்டும் அசைந்திடும்;
புதுமை முரசை முழக்கிடும்.

தலங்கள் தோறும் செல்லுவாய்;
தரணி வெப்பம் போக்குவாய்.
உலகம் சொர்க்கம் ஆகுமே
உன்றன் இனிய விஜயத்தால்!

அள்ள அள்ளக் குறைவிலா
அமுத சுரபி போல நீ
தெள்ளத் தெளிந்த காற்றினைத்
தினமும் கவர்ந்து வருவதேன்?

தணிந்து வருவாய் அலையிடை;
தாவிக் குதிப்பாய் மலையிடை.
பணிந்து நிற்பாய் புயலிடம்;
பார்த்துச் செல்வாய் அயலிடம்.

தொல்லை மிக்க உலகிலே
தூய்மை யான மகிழ்ச்சியை
நல்கும் இளந் தென்றலே!
நாடி எம்மை வாராயோ!

—பி. அமிர்தராஜா.

டி. எஸ். பி. புறப்பட்டுச் சென்ற சில நிமிஷங்களுக்கெல்லாம் தாம் வாக்களித்தபடியே புத்தகத்தை அனுப்பிவிட்டார்.

ஆம்..

'ஜான் பக்கன்' என்ற மேனாட்டு அறிஞர் எழுதிய 'முப்பத்தொன்பது படிகள்' என்ற சிறு நாவல்தான் அது!

''ஏற்கெனவே களைத்திருக்கிறாய், அதிக வேலைப் பளுவால். இனிமேல் உனக்குக் கவலை தேவையில்லை. நாங்கள் கவனித்துக் கொள்கிறோம். படுக்கச் செல்வதானாலும் செய்யலாம்'' என்று கலெக்டர் சுரேஷிடம் கூறினார்.

அவர் சொல்வதிலும் உண்மையிருந்தது!

நீச்சல் போட்டி அன்று பார்த்த சுரேஷ் அல்லவே அவன்? கண்களில் ஒளி குறைந்து வயோதிகன் போல் முகத்தில் சுருக்கங்கள் விழுந்திருந்தன. பளபளவென்று அவனுடைய அழகிய மேனியிலும் கருமை படர்ந்திருந்தது!

''அப்படியே செய்கிறேன், ஸார்'' என்று பதிலளித்த அவன் படுக்கை அறையை நோக்கிப் புறப்பட்டான்.

தற்போது ஒரு புது சௌகரியம் அவனுக்கு!

சுருள் கத்திப் பயம் ஏற்பட இப்போது இடமில்லையே!

புதிய இடமானதாலும், ஏற்கெனவே பழக்கப் பட்டிருந்ததாலும் அதிக நேரம் தூங்க முடியவில்லை சுரேஷால். அவன் உடலில் அந்த மாயச் சக்தி எங்கிருந்துதான் வந்ததோ? எவ்வளவுக்கெவ்வளவு ஓய்வு எடுத்துக் கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவுதான் நமக்குச் சுறுசுறுப்பும், உற்சாகமும் அதிகரிக்கும் என்ற தேகக்கூறு சாஸ்திரத்தின் கூற்றைப் பொய்ப்பித்திருந்தது அவனது உடல் தன்மை.

ஆம்....

வழக்கம்போல் ஒரு மணிக்கெல்லாம் எழுந்துவிட்டான் அவன். மேலும் தூக்கம் வராததால் 'முப்பத்தொன்பது படிக'ளை முழு மூச்சில் படிக்க முனைந்தான். காலை ஏழுமணிக்கெல்லாம் அதன் உபயோகம் புரிந்துவிட்டது அவனுக்கு.

* * *

சரியாக ஒன்பது மணிக்கு நாம் டெலிபோன் ரிஸீவருடன் சுரேஷைப் பார்க்கிறோம்.

அவன் கூறுவது என்ன? 'மிஸ்ட்ரீ டிஸைபர்ட்' (புதிர் அவிழ்ந்தது) என்பதுதானே?

12. வெற்றி வாயில்

டெலிபோனில் டி. எஸ். பி. சுரேஷைப் பிரமாதமாகப் புகழ்ந்தார். மேலும் அவரே தொடர்ந்தார். ''போனில் 'புதிரை'ப் பற்றிக் கூறுவது அபாயகரமானது என்பது உனக்கே தெரியும். நான் நேரில் மாலை வருகிறேன். இன்று 'ஆபீஸி'ல் மிக முகியமான 'பைல்'களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. மேலதிகாரிகளுக்கும் உன்னைப் பற்றித் தகவல் கொடுக்கிறேன்'' என்று கூறினார்.

சுரேஷ் 'எவரெஸ்ட்' வெற்றியைவிடப் பிரம்மாண்டமான வெற்றியை அடைந்துவிட்டான். உண்மையிலேயே அவனது வெற்றி மிகமிகப் பெரியதே. எவரெஸ்ட் வெற்றி மனிதனது சாதனையைத் தான் உலகிற்கு அளித்தது. ஆனல் சுரேஷின் வெற்றி மனிதனுடைய சாதனையின் திறத்தையும் காட்டி, அதற்குமேலும் ஒரு படி சென்று விட்டது.

ஆகவே சுரேஷின் வெற்றியின் உயரத்தை 29003 அடி என்று வைத்துக்கொண்டாலும் எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை. இதே சமயத்தில் தம் அலுவலகத்தில் கலெக்டர் ஒரு முக்கியமான விஷயத்தில் ஈடுபட்டிருந்தார்!

அவற்றில் ஒன்று, சேகருக்கும் விவரமாகக் கடிதம் எழுதி அவனுக்குத் தகுந்த ஸி. ஐ. டி. பாதுகாப்பு அளிப்பது, மற்றொன்று சுரேஷின் தந்தைக்கு, அவனைப் பற்றிச் சுருக்கமாக எழுதி, சுரேஷை இன்னும் சிலகாலம் தமது வீட்டிலேயே இருக்க அநுமதி கோருவது, வேறொன்று, அவன் படிக்கும் தேசியக் கல்லூரி பிரின்ஸிபாலுக்கு எழுதி அவன் பொருட்டு மறு தகவல் வரை லீவு வழங்கச் சர்க்காரின் சார்பாக வேண்டுகோள்.

ஆகப் பொதுவாக, சுரேஷின் ஒவ்வொரு சௌகரியத்திலும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார் அவர்.

மிஸ்டர் மாத்யூஸ், டி. எஸ். பி. அவர்கள் வேறோர் அலுவலில் ஈடுபட்டிருந்தார். அதுவும் சுரேஷ் சம்பந்தப்பட்டதே. மாகாணப் போலீஸ் தலைமை அதிகாரிக்கு சுரேஷைப் பற்றி விவரமாகப் புகழ்ந்து எழுதியிருந்தார். மற்றொன்று, தமது விசேஷ அதிகாரத்தின் மூலம் மிகுந்த கஷ்டப்பட்டே யாவருக்கும் கிடைக்கும் துப்பாக்கி லைஸென்ஸை, சுரேஷின் கைத் துப்பாக்கியை வைத்திருக்கும் சேகருக்கு அளித்து அந்த உத்தரவைத் தபால் மூலம் அனுப்பிக்கொண்டிருந்தார்.

அவிழ்ந்த புதிரிலிருந்த சரக்குகளைத் தனித்தனியாக எடுத்துத் துருவிக் கொண்டிருந்தான் சுரேஷ்! மற்றொரு முக்கியமான காரியமும்

செய்தான் அவன். தனது வெற்றியைக் குறித்து சேகருக்குத் தந்தி ஒன்றை அடிக்கக் கூறி பங்களா வேலைக்காரன் ஒருவனை அனுப்பியிருந்தான் அவன்.

சிலநாளைக்குமுன் ஒரு நாட்டுப் பிரதம மந்திரி தமக்குப் பதவி கிடைத்ததும் செய்த முதல் காரியம் தமது அதிர்ஷ்டத்தை வேறு நாட்டில் இருந்த தம் தாயாருக்குத் தகவல் கொடுத்தது தானும். அதற்கும், சுரேஷின் செயலுக்கும் அதிக வித்தியாசமில்லையே!

* * *

டிஸ்ட்ரிக்ட் கலெக்டரும், மாத்யூஸும் சுரேஷை முன்னிட்டுத் தங்கள் அலுவல்களிலிருந்து முன்னமேயே வந்துவிட்டனர். மாத்யூஸிடமிருந்து விஷயத்தைக் கேள்விப்பட்ட கலெக்டர் மகிழ்ச்சியில் என்ன செய்வதென்றே புரியாமல் நடனம் ஆட ஆரம்பித்துவிட்டார்.

எல்லாரும் 'நார்மலு'க்கு வந்ததும் சுரேஷ், தான் புதிரை அவிழ்த்த சமாசாரத்தைச் சொல்ல ஆரம்பித்தான். நான், 'தர்டி நைன் ஸ்டெப்'ஸைப் படித்துக் கொண்டிருக்கும் போது அங்கும் கிட்டத்தட்ட இதேபோல்தான் ஒரு சம்பவம். கதாநாயகன் வேறொருவன் டயரியிலிருந்து 'ஸைபர்' வார்த்தைகளைக் கண்டு பிடிக்க முயன்றான். முடியவில்லை. புதிரை விடுவிக்கக் கடைசியில் ஒரு தனிவழியைக் கண்டு பிடித்தான். புதிர் அவிழ்ந்தது. அவனது வழி எனக்குப் பயன்படவில்லை. ஆனால் அவன் உபயோகித்த முறைகளையும் ஆராய்ந்து பார்த்து, நானும் சிறிது யோசனை செய்து பார்த்ததில் விஷயம் தெளிவாகப் புலப்பட்டு விட்டது'' என்றான்.

அதிகாரிகள் இருவரும் வாயைப் பிளந்தனர், ஆச்சரியத்தால்! ''மேலே சொல்லு'' என்று கதை சொல்லும் பாட்டியைப் பேரன் தூண்டுவது போல் டி. எஸ். பி சுரேஷிடம் கூறினார்.

''மர்மவார்த்தை எந்தப் பாஷையைச் சேர்ந்தது என்று தெரியாதது தான் எனது சங்கடம். பறங்கியர்கள் ஐரோப்பியப் பொதுமொழியாகிய பிரெஞ்சில் பேசிக்கொண்டிருந்ததால் அவர்கள் மர்ம வார்த்தையை உபயோகித்த பாஷை எது என்று தெரியவில்லை. தற்போது 'அடெ ஃபிஃப்டீன் த்ரைஸ்' என்ற சொல்லை மூன்றாகப் பிரிக்கலாம் என்று தோன்றியது. கடைசி இரண்டும் ஆங்கில வார்த்தைகள் என்பது நிதர்சனமாகப் பட்டது. ஆகவே முதற் சொல்லும் ஆங்கிலமாகத்தான் இருக்கவேண்டும்.



''என்னைப் பொறுத்த மட்டிலே ஆங்கில அகராதிகள் பலவற்றைப் புரட்டியும் அந்த வார்த்தை இருப்பதாகப் புரியவில்லை. அப்போது நான் செய்த காரியம் ஒழுங்காக அந்தச் சொல்லைப் பேப்பரில் எழுதியது தான்!

''முதல் சொல்லுக்கு உச்சரிப்பின்படி மூன்று வித 'ஸ்பெல்லிங்'கள் உண்டு. ADA; UDA; ADE என்றபடி மூன்று விதமாக எழுதலாம். ஒவ்வொன்றை

யும் தனித்தனியாக எழுதி, கடைசியில்—15 Thrice என்பதை எழுதிவிட்டு நெடு நேரம் யோசனை செய்தேன். அவற்றில் ஒன்றும் பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் ஆராய்ந்ததில் மூன்றுவது இன 'ஸ்பெல்லிங்'கில் மட்டும் விசேஷம் இருப்பது போல் தோன்றியது. அதை மறு முறை, ADE - 15 thrice என்று எழுதினேன். இந்தச்சமயம்தான் வெற்றியின் வாசலை அடைந்து விட்டேன் நான். குறுக்கு வழி ஒன்றைக் கண்டு பிடித்தேன். முதல் வார்த்தையின் மூன்று எழுத்துக்களையும் ஏன் இலக்கத்தால் எழுதக்கூடாது? அதாவது ஆங்கில எழுத்து வரிசையில் அவற்றின் இலக்கத்தை எழுத்துகளுக்குப் பதில் எழுதக்கூடாது? அதன்படி A முதல் எழுத்து. D நான்காவது. E ஐந்தாவது. ஆக 145 கிடைத்தது.

''இலக்கம் 15 ஐ எழுத்தால் எழுதத் தீர்மானித்தேன். அதாவது 15 வது எழுத்தை அந்த எண்ணுக்குப் பதில் எழுதவேண்டும். அது ஆங்கில 'ஒ' (O) என்ற எழுத்தாக அமைந்தது. தற்போது ஒரு புதிர் அவிழ்ந்தது. முழுவார்த்தையும் ஓர் இலக்கமாகத்தான் இருக்கவேண்டும். அது '1450' '' என்று முடித்தான் சுரேஷ்.

''மேலே என்ன புரிந்தது?'' என்று கேட்டார் டி. எஸ். பி.

''த்ரைஸ் என்ற வார்த்தையின் பொருள் 'மூன்று தரம்'. அதன்படி 1450-ஐ மூன்று தரம் ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதினேன். கூட்டினேன். கழித்தேன். ஒன்றும் புரியவில்லையே! நீங்கள் அதைப் பார்த்துக் கொள்வீர்கள் என்ற தைரியம் எனக்கு'' என்று பதிலளித்தான் சுரேஷ்.

''இனிமேல் ஒரு புதிருமில்லை. 1450-ஐ முதல் தடவை மூன்றாகப் பிரி. இரண்டாம் தடவை இரண்டாகப் பிரி. மூன்றாம் தடவை முழு எண்ணாக வைத்துக் கொள். இப்போது என்ன புரிகிறது?'' என்று கேட்டார். சில நிமிஷங்களில் அவ்வாறே செய்து விட்டுக் கூறினான் அவன். ''மூன்றாகப் பிரித்ததில் அவ்விலக்கம் ஒரு தேதியாகவும், (1 - 4 - 50), இரண்டாகப் பிரித்ததில் நேரமாகவும் (14 - 56, அதாவது மாலை 2 மணி - 50 நிமிஷம்), முழு எண்ணாக்கியதில் ஒரு நெம்பராக வும் இருக்கலாம். அது ஒரு வாகனத்தின் நெம்பராகவுமிருக்கலாம்'' என்று முழு வெற்றியுடன் கூறினான் சுரேஷ்!

சபாஷ், சுரேஷ் நார்க்கே!

13. சேகரின் கடிதம்

அவனது திறமையைப் பலவாறாக மெச்சிக் கொண்டார் டி. எஸ். பி. ''உன்னை இன்று சுபாவமாகவே என் வீட்டில் சாப்பிடச் சொல்வதென்று நினைத்தேன். இன்று இரவு உனக்குப் 'பார்ட்டி' ஒன்று அளிக்கப் போகிறேன். விஷயம் ரகசியமானதால், பார்ட்டிக்குக் கலெக்டர் அவர்களும் அவர் குடும்பத்தினரும், நீயும் மட்டும் வரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று கூறினார்.

''உனக்குத் தற்போது பதினெட்டு வயது முடியவில்லை என நினைக்கிறேன். இருந்தாலும் எனது விசேஷ அதிகாரத்தால் தாற்காலிகமாக, அதாவது நீ விரும்பும்வரை 'கெஸட்டட் ஆபீஸர்' ராங்க்குக்கு நியமித்திருக்கிறேன். அங்கீகாரம், போலீஸ் கமிஷனரிடமிருந்து நாளை நடுப்பகலுக்குள் வந்துவிடும்'' என்று தொடர்ந்தார் அவர்.

சுரேஷ் தற்சமயம் அவர்களில் ஒருவனாகி விட்டான். முன்பு, தெரிந்தவன், கெட்டிக்காரன், உபயோகமானவன் என்பதால் மதிப்பு இருந்தது அவனுக்கு. இப்போது ரகசியஉத்தியோகஸ்தன் என்ற முறையில் மதிப்பு உயர்ந்தது அவனுக்கு!

* * *

சுரேஷ் தந்த சில புதிய திடுக்கிடும் தகவல்களில், அவன் அதிகாரியானாலும் அலுவலகத்திற்கு உத்தியோக பூர்வமான முறையில் வருவதற்கு எண்ணிறந்த தடங்கல்களும் கஷ்டங்களும் இருந்தன. ஆம்.. யூகத்தின் பேரில்

அவன் அத்தகவல்களைக் கூறினாலும் உறுதியிருந்தது அவற்றில். அதிசயமும், முக்கியத்துவமும் இருந்தன அவற்றில்!

சுரேஷின் போக்கைக் கண்ட டி. எஸ். பி, அவனது கூற்றில் உண்மையறிந்தார். அவன் கொடுக்கும் ஒவ்வொரு ஆலோசனையையும் பின்பற்றுவதாக உறுதி கூறினார். குறிப்பிடப்பட்ட 1-4-50 அன்று விசேஷம் இருக்குமானால் அந்தத் தேதிக்கு இன்னும் சில தினங்களே இருந்தன. அன்று மார்ச் மாதம் இருபதாம் தேதி. முழு மூச்சுடன் ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்துவிட்டார் டி. எஸ். பி. தற்போது மற்றொரு பெரிய இடையூறு ஏற்பட்டிருந்தது பந்தோபஸ்து ஏற்பாடுகளைச் செய்வதில்.

அன்று இரவு மூவரும் பேசிக்கொண்டிருந்தனர் வழக்கம்போல். ''நம் நாட்டில் இரண்டு மூன்று கூட்டங்கள் உலாவி வருவதாக ரகசியத் தகவல் அளித்திருக்கிறார் கமிஷனர். சென்னை ராஜ்யத்தில் இருப்பது ஒன்றுதான். அது, நாம் எதிர்நோக்கியிருக்கும் கும்பலாகத்தான் இருக்கவேண்டும். அவர்களது நோக்கம் இன்னதென்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனாலும் பெரிய கொள்ளைகளிலும், ஜனங்களிடையே கலகத்தைத் தூண்டுவதிலும்தான் ஈடுபட்டிருக்கின்றது அந்தக் கும்பல். பணக் கட்டும், ஆள் கட்டும் இருப்பதால் அவர்களைப்பற்றிச் சிறு தகவலும் அறிய முடியவில்லை. ஆனாலும், போலீஸார் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் அவர்களுக்கு முன்பே தெரிந்துவிடுகின்றன'' என்று இழுத்தார் டி. எஸ். பி.

''நீ கூறிய தகவல்களினால் அந்தத் தடங்கலின் பெரும்பகுதி ஒழிக்கப்படுவது சாத்தியமாக இருக்குமென நம்புகிறேன்'' என்று தைரியத்துடன் கூறினார்.

சுரேஷும் தகுந்த ஆலோசனைகளை அளித்துக்கொண்டிருந்தான். மனோதத்துவ முறைப்படி 'இன்டெலிஜண்ட் கோஷண்ட்' என்ற பரிசோதனை ஒன்றுண்டு. அதன்படி

''டேய் பையா! கஜினி முகமது இந்தியாவின் மேல் ஏன் படையெடுத்தார்.

''நீங்க இந்த மாதிரி எங்க பிராணனை வாங்கணும்கறத்துக்காகதான் ஸார்''

ஒருவரின் அறிவின் தன்மை எப்படி என்று கணக்கிடலாம். சாதாரணமாக, அறிவுடையோரிடையே, பத்து வயதுச் சிறுவன் ஒருவனுக்கு, பன்னிரெண்டு வயதுச் சிறுவனுக்கு இருக்கவேண்டிய அறிவின் திறன்தான் இருக்கலாம். ஆனால் சுரேஷிடம் அதே சோதனையைச் செய்தால் பத்து வயதுச் சிறுவன் பதினெட்டு வயது வாலிபனது அறிவைப் பெற்றிருப்பது போன்ற விகிதத்தில் இருப்பது நிச்சயம் புலப்படும்.

ஆகவே, டி. எஸ். பி.க்குத் தனது அறிவை உபயோகித்து ஆலோசனை அளித்தான் என்பதில் வியப்பில்லை.

* * *

''கொள்ளைகளில்தான் பெரும்பாலும் ஈடுபடுவது அவர்களது வழக்கம் என்பது தாங்கள் கூறுவதிலிருந்து புலப்படுகிறது. ஆகவே ஏப்ரல் முதல் தேதி அன்றும் பெரும் அளவில் கொள்ளை அடிக்க அவர்கள் திட்டம் செய்திருக்க வேண்டும். நமது ஜில்லாவின்

தலைநகர்தான் அவர்களது இலக்கு என்பது நிச்சயம். மிகப் பெரும் அளவில் பணம் புழங்கும் பொது ஸ்தலங்கள், சர்க்கார் கஜானாக்கள், தனிப்பட்ட கடைகள், பொது ஸ்தலங்கள், பணக்காரர் வசிக்கும் இடங்கள் இவைகளைப் பற்றிய முழு விவரமும் அடங்கிய குறிப்பு எனக்குத் தேவையாயிருக்கிறது'' என்று சுரேஷ் கூறினான். 'மறு நாள் காலை அலுவலகத்திலிருந்து அனுப்புவதாகக் கூறினார் டி. எஸ். பி.

டி. எஸ். பி. மும்முரமாக உத்தரவுகள் போடுவதையும் அவற்றை நிறைவேறச் செய்யும் பொறுப்பையும் மேற்பார்வை செய்துகொண்டிருந்தார். தமிழறிந்த ரகசிய அதிகாரிகள் சிலர் பம்பாயிலிருந்து விமான மூலம் தருவிக்கப்பட்டனர் பரம ரகசியமாக. அவர்கள் ஒருவரிடம், குறிப்பிட்ட நபர் ஒருவரைக் கவனிக்கும்படி உத்தரவிட்டிருந்தார் டி. எஸ். பி.

அன்றிரவு ஆலோசனைக் கூட்டத்தில் முதல் நாள் கூறிய தகவல்களைக் கொண்டு வந்திருந்தார் அவர். யாவற்றிலும் அதிகமாக ஒரே சமயத்தில் பணம் புழங்கும் இடங்கள் இரண்டு 'பாங்க்'குகளாயிருந்தன. பொது ஸ்தலங்களான 'பாங்க்'களாயிருந்தது அவர்களுக்கு ஒரு விதத்தில் சௌகரியமாய்ப் போய்விட்டது. உயர்ந்த ரக நாய் ரொட்டித் துண்டை நோக்கி ஓடுமா அன்றி எலும்புத் துண்டைத் தேடுமா என்பது அவர்களுக்கா தெரியாது?

இரண்டு 'பாங்க்'கிலும் சற்று முரண்பாடு இருந்தது. சுரேஷின் கணக்கு இருந்த 'திருச்சி பாங்க்'கியின் கட்டடங்கள், பந்தோபஸ்து ஏற்பாடுகள், அமைப்புகள் போன்றவை பார்ப்பவர்களுக்கு அதன் மதிப்பையும் பணப் புழக்கத்தை மிகைப்படுத்திக் காட்டின. ஆனால் உண்மையில் இவ்வளவு படாடோபமில்லாத 'மனோகரா பாங்க்'கே அதிகச் செல்வம் வாய்ந்தது என ரெகார்டுகளிலிருந்து தெரியவந்தது.

'பறங்கியர் திட்டம்' எதை நோக்கி என்பதுதான் சந்தேகத்துக்கிடமாயிருந்தது. ஆனாலும் அவர்களது கையாட்களின் மூலம் இரண்டு 'பாங்க்'குகளைப்பற்றிய முழு விவரங்களைத் தெரிந்திருக்க முடியும். ஆகவே, 'மனோகரா பாங்க்'கே அவர்களது இலக்கு என்பதில் சந்தேகமில்லை, பெரும்பாலும்.

ஆபீஸ் ரெகார்டுகளைப் புரட்டிக்கொண்டிருந்த டி. எஸ். பி, திடீரென டெலிபோன் டயலைத் திருப்பினார். ''இன்ஸ்பெக்டர் பொன்னுரங்கம், நான்தான் டி.எஸ்.பி. பேசுகிறேன். தங்கள் லீவு அப்ளிகேஷனைப் பார்த்தேன். சம்பந்தப்பட்ட பேப்பர்களுடன் ஒரு மணி நேரத்தில் என்னைச் சந்திக்கவும்'' என்று அவர் வாய் முணுமுணுத்தது.

பொன்னுரங்கம் வந்து சேர்ந்ததும், ''லீவு எத்தனை நாளைக்கு மிஸ்டர்?'' என்று கேட்டார் டி. எஸ். பி, அதிகாரத்துடன்.

''பதினைந்து நாட்கள்'' ரத்தினச் சுருக்கமாகப் பதில் வந்தது இன்ஸ்பெக்டரிடமிருந்து.

''தந்தியை எடுங்கள், பார்க்கலாம்.?'' அவநம்பிக்கையுடன் கேட்ட கேள்வியாகத் தோன்றியது இன்ஸ்பெக்டருக்கு.

தந்தி பாரத்தை எடுத்துக் கொடுத்தார்.

''உன் மாமாவுக்கு உடம்பு அதிகமாயிருக்கிறது. உடனே வரவும்.''

''ஓஹோ'' என்ற வார்த்தை டி. எஸ். பி. யிடமிருந்து வெளி வந்தது. ஆனால் ஆச்சரியத்துக்கிடையே 'லீவு ஸாங்க்ஷன்' என்ற உத்தரவில் கையெழுத்திட்டுக் கொடுத்து இன்ஸ்பெக்டரை அனுப்பினார் அவர்.

அன்று இரவு கூட்டத்தில் நடந்த விஷயங்களைக் கூறினார் டி. எஸ். பி. சுரேஷுக்கு இன்னொரு வெற்றி தற்சமயம் காத்திருந்தது. அவனுக்குச் சேகரிடமிருந்து அன்று வந்திருந்த கடிதத்தை எடுத்து வாசித்தான். (தொடரும்)

நீங்களும் நானும்

[இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேக ங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவை களைச் சொல்கிறேன். வேடிக்கை விளையாட்டுக் கேள்வி களாக இருக்கலாம்; ஆனால் பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன் படக்கூடிய கேள்விகளாகவும் கேளுங்கள். —ஆர்வி.]

ஆர். கே. சூடாமணி, சென்னை 17

கே: மின்சாரம் என்பது இயற்கைச் சக்தியா, யந்திர சக்தியா?

ப: இயற்கைச் சக்தி. மின்னல் என்பது மின்சாரந்தான். இயற்கையில் அமைந்து கிடக்கும் மின்சார சக்தியை வேலை செய்யக் கூடிய நிலைக்கு மாற்றுகிறது யந்திரம்.

குழந்தைவேலு, திருச்சி – 3

கே: கடலின் ஆழம் என்ன?

ப: சராசரி ஆழம் 12,450 அடி. அதிகமான ஆழமுள்ள இடத்தில் 35,640 அடி. அதாவது ஆறே முக்கால் மைல். அந்த இடம் பசிபிக் சமுத்திரத்தில் மரியானா கடலில் உள்ள குவாம் தீவுக்கு அருகே உள்ளது.

எஸ். ஆர். ராமானுஜம், தண்டையார் பேட்டை

கே: அணுக் குண்டு சோதனைகளை நிறுத்தச் சொல்லி, ராஜாஜி வற்புறுத்துகிறாரே, அதை யாராவது கேட்கிறார்களா?

ப: ராஜாஜியே கவலைப்படாத விஷயத்தைப்பற்றி உனக்கு ஏன் கவலை?

அ. பவானி, ஈரோடு

கே: கடவுள் இருக்கிறார் என்பதை எப்படி நிரூபிப்பீர்கள்?

ப: கடவுளுக்கு அப்படி ஒரு சங்கடம் வராது என்று நினைக்கிறேன்.

ஜி. பாஷா, திருவண்ணாமலை

கே: ஆசியாவிலேயே மிகப் பெரிய புத்தக சாலை எது?

ப: கல்கத்தாவில் உள்ள பெல்வடீர் லைப்ரரிதான். அதை இப்போது நாஷனல் லைப்ரரியாகக் கூறுகிறார்கள்.

பி. எஸ். பாலசுப்பிரமணியம், புதுக்கோட்டை

கே: மனிதனுடைய மூளை எடை எத்தனை?

ப: சுமார் மூன்று பவுண்டு.

கே. ஏ. ஹாருன், பங்களூர் சிடி

கே: உங்களுக்குப் புகழ்ச்சி என்றால் பிடிக்குமா?

ப: புகழ்ச்சி என்பது வாசனைப் பூவைப்போல; அதன் வாசனையைப் பிடிக்கலாம்; அப்படியே மென்று தின்றுவிடக் கூடாது.

ஜி. ஏழுமலை, செங்கல்பட்டு

கே: மந்திரியாக இருந்த பிறகுதான் கவர்னராக வரவேண்டுமா?

ப: அப்படி ஒன்றும் இல்லை. மந்திரி வேலைக்கு உபயோகமில்லை என்றால் கவர்னராக வரலாம்.

பெ. மாணிக்கம், பாப்பாங்காடு

கே: எந்த நாட்டு அரசியல் மிகவும் நல்லது? ஏன்?

ப: சுவிட்ஜர்லாந்து நாட்டு அரசியல்தான். இரண்டு உலக யுத்தங்களைப் பார்த்தும் அது ஒன்றிலும் கலக்காமல் இருந்ததே, அதனால்தான்.

எம். சர்தார் அஹமத்கனி, திருச்சி

கே: இறைவன் படைப்பிலே அதிசயமான படைப்பு எது?

ப: மனிதன்.

கே: ஏன்?

ப: கேள்வி கேட்கத் தெரிவதால்!

எம். கே. சுப்புலக்ஷ்மி, மதுரை
கே: இன்றுள்ள சிறந்த சங்கீத வித்வான் யார்?
ப: அரியக்குடி ராமானுஜ ஐயங்கார்.

எஸ், விசுவநாதன், பம்பாய் - 39
கே: படிப்பு முக்கியமா? பாட்டு முக்கியமா?
ப: முதலில் படிப்புத்தான் முக்கியம்.

வி. குமார், சென்னை - 4
கே: கிராமபோன் ஒலிப் பதிவுக்கும் ரேடியோ ஒலிப்பதிவுக்கும் வித்தியாசம் உண்டா?
ப: உண்டு; ரொம்ப உண்டு. கிராமபோன் இசைத் தட்டு எடுக்க முதலில் மெழுகுத் தட்டில் ஒலிப் பதிவு செய்து கொள்வார்கள். பிறகு அதிலிருந்து உலோகத்தில் அச்சு எடுத்துக்கொள்வார்கள், ஷெல்லாக் அரக்கினாலான தட்டுகளில் அந்த அச்சைக் கொண்டு பல பிரதிகள் எடுப்பார்கள். ரேடியோ ஒலிப்பதிவு என்பது மின்சார ஒலிப் பதிவு. மெல்லிய கண்ணாடித் தட்டிலோ உலோகத் தட்டிலோ ஸெல்லொஸ் கலந்த திரவம்பூசியிருக்கும். நீலக் கல் ஊசியால் மின்சார அசைவுகளைப் பதிவு செய்கிறார்கள். கிராமபோன் தட்டு ஒரு நிமிஷத்துக்கு 78 தடவை சுற்றுகிறது. மின்சார ஒலிப் பதிவு 33 தடவை சுற்றும். இரண்டு மடங்கு நிகழ்ச்சியை மின்சார ஒலிப்பதிவில் பதித்து விடலாம்.

பி. கமலக்கண்ணன், பூதமங்கலம்
கே: உலகத்திற் பெரியது எது?
ப: சத்தியம்.
கே: மலையினும் பெரியது எது?
ப: மானம்.
கே: கடலினும் பெரியது எது?
ப: அன்பு.

கே. கே. திருமல்ராவ், செவ்வாய்ப்பேட்டை
கே: சென்ற பொதுத் தேர்தலில் நீங்கள் யாருக்கு ஓட்டுப் போட்டீர்கள்?
ப: அதையெல்லாம் கேட்காதே. இந்தக் காலத்தில் தேர்தலுக்கு முன்னால் யாருக்கு ஓட்டுப் போடப் போகிறேன் என்று சொல்வதும் ஆபத்து. போட்ட பிறகு யாருக்குப் போட்டேன் என்று சொல்வதும் ஆபத்து.

அ. திருவேங்கடம், பெண்ணாடம்
கே: ஹிந்தி இனிமையான பாஷையா?
ப: ஆம்; நமக்குத் தமிழைப் போல, அவர்களுக்கு ஹிந்தி.

வேணுகோபாலன், ஸ்ரீ வில்லிபுத்தூர்
கே: அநுபவம் என்பது என்ன?
ப: அது ஒரு கடினமான வாத்தியார். அது பரீட்சையை முதலில் செய்து விட்டுப் பின்னால்தான் பாடத்தைப் போதிக்கிறது.

மு. நெ. ஆ. காதர், ப்துளை
கே: காக்கைக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தம் என்ன?
ப: காக்காய்ப் பிடிப்பது என்ற பழமொழி வந்தது ஒன்றுதான்.

குழ, வேங்கடாசலம், புதுவயல்
கே: என் வயது 18½. உயரம் 3 அடி 6 அங்குலம். எடை எவ்வளவு இருக்க வேண்டும்?
ப: 5 அடி 6 அங்குலம் உயரமுள்ள மனிதன் 130 முதல் 140 பவுண்டு வரை இருக்க வேண்டும். உன் வயதுப்படி பார்த்தால் 100 முதல் 115 பவுண்டாவது இருக்க வேண்டும்.

எஸ். ரகு, கடலூர். என். டி.
கே: ஆணைவிடப் பெண்ணுக்கு மூளை அதிகம் என்று ஒரு கவர்னரே சொல்லி யிருக்கிறாராமே!
ப: இருக்கும்; அவர் விஷயத்தில் அது உண்மையாகக்கூட இருக்கலாம்.

அம்பிகாபதி, ஒசூர்
கே: நேருஜிக்கு ஜோஸ்யம் என்றால் பிடிக்காதாமே, உண்மை தானா?
ப: நேருவுக்கு என்ன, யாருக்குமே வயசாகி விட்டால் இப்படித்தான் பல விஷயங்கள் பிடிக்காமல் போய் விடும்.



வெற்றி வீரன்

அண்ணு, வணக்கம். 'வெற்றி வீரன்' என்ற கதை ஹாதிம் தாய் என்ற கதையின் தழுவல்.

—ராமராஜ், கம்பம்.

[பழங்காலத்துக் கதைகள் பலவிதமாய் வழங்குகின்றன. அதில் இது ஒன்று. (ஆ-ர்.)

ஒரு சிறு கால்

'துப்பறியும் குப்பு' என்று முன் இதழில் வெளியான கதையை நான் எழுதியிருந்தேன். ஒரே ஒரு கால் அதிகமாகப் போய் என் பெயரையே அது மாற்றிவிட்டது. ர. தங்கவேலன் என்பது ரா. தங்கவேலன் என்று தவறுதலாக அச்சாகியிருக்கிறது. முடிந்தால் திருத்தம் வெளியிடுங்கள்.

—ர. தங்கவேலன், திருச்சி.

எதிர்பாராதீர்கள்

விரைவில் வெளிவராது! எதிர்பாராதீர்கள்!

சோம்பேறி (யுகாந்தர இதழ்) ஆசிரியர்: தூங்குமூஞ்சி

தழுவல் உலக மேதைகள், குட்டிச்சுவர், வெள்ளி மூக்குக் குதிரை, சித்திரப் புளுகன் முதலானோர் எழுதுவார்கள்.

—சு. கிருஷ்ணமூர்த்தி, ரங்கூன்.

வெற்றி கண்டோம்

15-4-57 கண்ணன் இதழில் வெளியான காந்தம் என்ற கட்டுரையில் கண்டபடி செய்து பார்த்து வெற்றி கண்டோம். மேலும் இது போன்ற கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.

—K. காசியும் நண்பர்களும், திருச்சி-3.

சென்ற இதழில்

'பலே திருடன்' என்ற கதை சென்ற இதழில் எங்கே ஒளிந்து கொண்டானே தெரியவில்லையே!

—ஏ. வள்ளியப்பன், காரைக்குடி.

—தி. ராமமூர்த்தி, ஸ்ரீவில்லிப்புத்தூர், மற்றும் பலர்.

('பலே திருடன்' சரியான வேலை செய்தான். நீங்கள் பொருளடக்கத்தைக்கூட விடவில்லை என்பது இப்போது தெரிந்தது. அவன் இந்த இதழில் அகப்பட்டுவிட்டான்; பாருங்கள். ஆ-ர்.)

முன்பே வந்தது

'அவரைத் தெரியும். ஆனல்....' என்ற கதை முன்பே வெளிவ கதை. மற்றவை மிக அருமையாக இருந்தன.

—வி. பாஸ்கரன், ஜயங்கொண்டசோழபுர

ஒரு நிகழ்ச்சி நிரல்

பிடையூர் லொட லொடா பொழுதுபோக்குச் சங்கம்.
நாகரிகமாக இருப்பது எப்படி - குமாரி ஜம்பம் பேச்சு.
மாமியாரும் மருமகளும் - வாயாடி வெங்கம்மாள் பேச்சு.
அண்டை வீட்டுச் சண்டை - 'ஊர் வம்பு'
ஆசிரியை சூர்ப்பணகாதேவி பேச்சு.
ஒட்டுக் கேட்டல் - செவிட்டுச் செங்கமலம் பேச்சும் நடிப்பும்
ஸ்ரீமதி தாடகை தலைமை வகிப்பார்.

—பேபி விஜயா, பெரும்பாக்கம்.

அவசரப்படாதே!

இரவு எட்டு மணிக்குப் படுத்துக்கொள்ளும் ஒருவன், காலை 9 மணிக்கு எழுந்திருக்க வேணுமென்று அலாரம் வைத்துவிட்டுப் படுத்து, உடனே தூங்கி விடுகிறன். அதேபோல ஒன்பது மணிக்கு அலாரம் அடித்து எழுந்திருந்தால் அவன் எத்தனை மணி நேரம் தூங்கியிருப்பான்?

—க. ராயல், சென்னை-11.

(விடை 40-ஆம் பக்கம். ஆ-ர்.)

ஓரெழுத்துப் புதிர்கள்

(1) எது பால் கறக்கும்?
(2) சோம்பேறி ஓட்டுவது எது?
(3) அடிக்கவும் அணைக்கவும் செய்வது எது?
(4) இகழ்ச்சியைக் குறிப்பது எது?
(5) சுறுசுறுப்புத் தருமாம்; எது?
(6) கண்களிலும் காகிதத்திலும் தீட்டலாம். எது?

—டி. எஸ். ரகுநாதன், மேட்டூர் டாம்.

விடை: 40-ஆம் பக்கம்.

சந்தேகம்

"நீ பிழைப்பது சந்தேகம்!" என்றார் டாக்டர்.

"என்ன டாக்டர், இப்படி நோயாளியைப் பயமுறுத்தலாமா?" என்றார் நோயாளி.

"நான் என்ன செய்வேன்? இந்த வியாதி வந்தால் நூற்றுக்கு இருபது பேர் நிச்சயம் பிழைக்கமாட்டார்களாம். இதுவரையில் பத்தொன்பதுதான் ஆகியிருக்கிறது. நீ இருபதாவது ஆசாமி. அதனல் தான் சந்தேகப்படுகிறேன்!"

—ஏ. சீனிவாசன், மயிலாப்பூர்.

நான் விடப் போவதில்லை

பல கதைகள் அனுப்பியும் கண்ணனில் என் கதை ஒன்றுகூடப் பிரசுரமாகவில்லை. ஆயினும் இது எனக்கு ஊக்கத்தையே அதிகப்படுத்து கிறது. என்ன ஆனலும் கண்ணனில் என் கதை வரும்வரையில் நான்

விடப் போவதில்லை. மேலும் மேலும் எழுதியனுப்பிக்கொண்டே இருக்கப் போகிறேன்.

—முள்ளுவாடி எம். குப்புசாமி, திருவண்ணாமலை,

(நல்ல கதையாகக் கிடைக்கும் வரையில் நானும் அதைப் பத்திரிகையில் விடப்போவதில்லை. ஆ-ர்.)

வேடிக்கைப் புதிர்

பாபு கொஞ்சம் பணம் வைத்திருந்தான். ''எவ்வளவு பணம்?'' என்று அவன் நண்பன் கேட்டான். அதற்குப் பாபு, ''என்னிடமுள்ள ரூபாயை இரண்டால் வகுத்தால் மீதி ஒன்றும், மூன்றால் வகுத்தால் மீதி இரண்டும், நான்கால் வகுத்தால் மீதி மூன்றும் வரும்'' என்றான். அப்படியானால் அவனிடம் எவ்வளவு பணம் இருந்தது?

—கி. ரா. திருமலை, தென்காசி.

(விடை: 40-ஆம் பக்கம்.)

ஜக்கு துப்பறிகிறான்

கண்ணன் வெளியீடாகப் பல புத்தகங்கள் வெளி வந்தும் ஜக்கு துப்பறிகிறான் மட்டும் இன்னும் புத்தகமாக வரவில்லையே, ஏன்? அவசியம் வெளியிடுவீர்களா?

—டி. கே. திருமலை, திருநெல்வேலி.

(கவலைப் படாதே; விரைவில் வரும். ஆ-ர்.)

எட்டு எட்டு ஆயிரம்

எட்டு என்ற எண்ணை எட்டுத் தடவை உபயோகித்து 1000 என்ற விடை வரச் சொல்ல முடியுமா? —பிரஸாத், சென்னை 4.

(விடை: 40-ஆம் பக்கம்.)

நயே பைசே

கண்ணன் விலை 13 நயா பைசா என்று அச்சிட்டிருக்கிறீர்கள். ஆனால் நயே பைசே என்று அல்லவா அச்சிடவேண்டும்?

—கோ. அரங்கநாதன், பரமக்குடி.

(நயா பைசாவைப்பற்றி ஏற்பட்ட குழப்பங்களில் இதுவும் ஒரு குழப்பம். தமிழில் நயா பைசா என்று சொல்வதே கஷ்டமாக இருக்கிறது. இதில் நயே பைசே என்று திருத்தமாகச் சொல்வது என்ன? புதுக் காசு, பழங்காசு என்றுகூடச் சொல்லவேண்டியதில்லை. நம் நாட்டில் காசு என்பது வழக்கில் இருந்திருக்கிறது. அப்படியேகூட இதை வழங்கலாமே. பதின்மூன்று நயா பைசா அல்லது நயே பைசே என்பதைவிட 13 காசு (கள் வேண்டாம்) என்பது காதுக்கும் சரி, கருத்துக்கும் சரி, நன்றாக இல்லையா? ஆ-ர்.)

பெரிய எழுத்தாளர்கள்

ராஜாஜி, கி. வா. ஜ., மு. வ., ரா. பி. சே., போன்ற பெரிய எழுத்தாளர்களைச் சாதாரண இதழ்களில்கூட எழுதச்செய்து வெளியிட்டால் எங்களுக்கு மிகவும் பயன்படும்.

—மு. சோமசுந்தரம், மதுரை.

(கண்ணனில் இவர்களுடைய கதை கட்டுரைகள் அவ்வப்போது வெளிவருகின்றன. இனியும் வரும். ஆ-ர்.)

எப்படி அனுப்புவது?

கதை எழுதினேன்; ஒரு வாரம் திருப்பிப் பாராமல் வைத்திருந்தேன். எனக்கே தபாலில் அனுப்பிக்கொண்டு படித்துப் பார்த்தேன். நன்ருக இருப்பதாகத் தோன்றியதால் நண்பர்களிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னேன். அவர்களும் நன்ருக இருப்பதாக அபிப்பிராயப் படுவதால் அந்த இனி எப்படித் தங்களுக்கு அனுப்பவேண்டும் என்று கூறக் கோருகிறேன்.

—என். ஸ்ரீதரன், மேச்சேரி.

(அதை நன்ருக மடித்து உறையிட்டு, திரும்பப் பெறுவதற்கான தபால் தலையும் உள்ளே வைத்து, மேலே போதிய தபால் தலை ஒட்டி, ஆசிரியர், கண்ணன், மயிலாப்பூர், சென்னை 4 என்று முகவரியிட்டு அனுப்பு. அதற்குமேல் நான் படித்துப் பார்க்கிறேன். ஆ-ர்:)

* * * *

மூளை தேவை

என் கதை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்ருல் தங்கள் மூளையில் எனக்குக் கொஞ்சம் தருகிறீர்களா?

—வளர்மதி, குடியேற்றம்.

(என் மூளையைச் செலுத்திச் சில புத்தகங்கள் எழுதியிருக்கிறேன். அதை விலைக்கு வாங்கினுல் போகிறது. ஆ-ர்.)

யார்?

ஆசையினுல் அழிவது ஆண்களா, பெண்களா?

—ஏ. எல். என்., பாதூர்.

(இந்தக் கேள்வி கேட்கும் நீ ஆணு, பெண்ணு என்பதைப் பொறுத்திருக்கிறது பதில். (ஆ-ர்.)

விடைகள்:

ஒரு மணி நேரம்.

ஆ; ஈ; கை; சீ; டீ; பை.

11 ரூபாய்.

8+8+8+88+888=1000

கண்ணன் கழகம்
அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம்.....................

....

பிறந்த தேதி...............

(தேதி, மாதம், வருஷம்)

கூபன் நெ. டிச. 15-'57

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன்

சித்திரப் போட்டி

கண்ணன் பத்திரிகையில் உங்களுக்காகப் புதிய சித்திரப் போட்டி ஒன்றை வெளியிடுகிறோம். கதை, கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்ட உங்களுக்கு இந்தப் போட்டி மிகவும் மகிழ்ச்சி தரும் என்று நம்புகிறோம்.

இந்தப் போட்டியில்—

★ ஐந்து வயது முதல் பதினாறு வயதுவரையுள்ளவர்கள்தான் கலந்துகொள்ளலாம்.

★ படங்கள் அனுப்புபவர்கள் தொடர்ந்து மூன்று இதழ்களில் வெளிவரும் கண்ணன் கழகக் கூப்பன்களில் மூன்றைப் பூர்த்திசெய்து படங்களுடன் இணைத்து அனுப்பவேண்டும்.

★ படங்கள் டிராயிங் பேப்பரில் ஒரே பக்கத்தில் வரையப்பட் டிருக்கவேண்டும்.

★ படங்களுக்கு உங்களுக்குப் பிடித்தமான, பொருத்தமான தலைப்பை நீங்களே கொடுக்கவேண்டும்.

★ வர்ணப் படங்கள் அனுப்புபவர்கள் வாட்டர் கலர் பெயிண்டைதான் கொடுக்கலாம். வேறு வகை வர்ணங்கள் உபயோகப்படுத்தலாகாது.

★ ஒருவர் மூன்று படங்கள் வரையில் அனுப்பலாம்.

★ ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள் படங்களை எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

இவ்வளவுதான் நிபந்தனைகள். பரிசுக்குரிய படங்களை, கலைமகள் - கண்ணன் ஓவியக் குழுவினர் பரிசிலனை செய்வார்கள். இந்தப் போட்டி சம்பந்தப்பட்ட மட்டில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. படங்களுக்குப் பின்புறத்திலோ அடியிலோ உங்கள் வயசு, பெற்றோர், விலாசம் முதலியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். தேர்ந்தெடுக்கப் படாத படங்களைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலை வைத்திருக்கவேண்டும்.

மொத்தம் வயதுவாரியாக ஆறு பரிசுகள் உண்டு. மற்றவை பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். அதற்கும் உரிய சம்மானம் உண்டு.

கண்ணன் சித்திரப்போட்டி முடிவு ஜூலை 15-ஆம் தேதி இதழில் வெளியாகும்.

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.

(Regd, as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542